Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 22 சனிக்கிழமை (08.10.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 316



வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் ஆதரவாளர்கள் மத்தியில் மஹிந்த...

## வேட்பாளர்கள் விவரம் ஒரே பார்வையில்...!

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ள 13 பேர் விவரம் வருமாறு:-

| பிரமுகர் | | கட்சி |
|---|---|---|
| ✱மஹிந்த ராஜபக்ஷ | - | ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு |
| ✱ரணில் விக்கிரமசிங்க | - | ஐக்கிய தேசியக் கட்சி |
| ✱விமல் கீகனகே | - | ஸ்ரீலங்கா தேசிய முன்னணி |
| ✱ஜே.ஏ.பி.நெல்சன் பெரேரா | - | இலங்கை முற்போக்கு முன்னணி |
| ✱ஸ்ரீதுங்க ஜெயசூரிய | - | ஐக்கிய சோசலிஷக் கட்சி |
| ✱சமில் ஜெயனெத்தி | - | புதிய இடதுசாரி முன்னணி |
| ✱விஜே டயஸ் | - | சோசலிஷ சமத்துவக் கட்சி |
| ✱அஜர அசோக சுரவீர | - | தேசிய அபிவிருத்தி முன்னணி |
| ✱ஏ.கே.ஜயவீர ஆராய்ச்சிகே | - | ஐக்கிய ஜனநாயக முன்னணி |
| ✱அநுர சரத் சில்வா | - | ஐக்கிய லலித் முன்னணி |
| ✱விக்டர் ஹெட்டிகொட | - | ஐக்கிய இலங்கை பொதுமக்கள் கட்சி |
| ✱சாந்த தர்ம வஜிர | - | ஐக்கிய தேசிய மாற்று முன்னணி |
| ✱அருண சொய்ஸா | - | றுகுணு மக்கள் கட்சி |



வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் ஆதரவாளர்கள் மத்தியில் ரணில்...

# ரணில், மஹிந்த உட்பட 13 பேர்

# ஜனாதிபதித் தேர்தல் களத்தில்!

## சுயேச்சை எவருமில்லை

கொழும்பு,ஒக்ரோபர்8

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஐந்தாவது ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான தேர்தலில் போட்டியிடுவதற்கு ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதமரான மஹிந்த ராஜபக்ஷ, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் உட்பட பதின்மூன்று அரசியல் கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள் தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருக்கின்றனர். இம்முறை அரசியல் கட்சிகளைச் சாராத சுயேச்சைகள் எவரும் போட்டியில் குதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இம்முறை தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள ஒரு கோடி 33 லட்சத்து 77 ஆயிரத்து 160 வாக்காளர்கள் எதிர்வரும் நவம்பர் 17ஆம் திகதி நடைபெறும் வாக்களிப்பில் பங்குகொண்டு இந்தப் பதின்மூன்று பேரில் ஒருவரை நாட்டின் அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவுசெய்வர்.

இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னேற்பாடாக 14 அரசியல் கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்களின் சார்பில் தேர்தல் திணைக்களத்தில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டிருந்தது. (16ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடாதிபதி நேற்றிரவு கடத்தித் தாக்கப்பட்டார்!

### படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் சேர்ப்பு



யாழ்ப்பாணம்,ஒக்.8

சாவகச்சேரி, மீசாலையில் இயங்கிவரும் ஸ்ரீகாயத்திரி காமகோடி பீடத்தின் பீடாதிபதி இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டு பலமாகத் தாக்கப்பட்டிருக்கிறார்.

மிகமோசமாகத் தாக்கப்பட்டு மயக்கமுறும் நிலையில் வீதி ஒன்றில் கிடக்கக் காணப்பட்ட இவர், நேற்றிரவு யாழ்.மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடாதிபதி ராஜ்குமார் சுவாமிகளே இவ்வாறு இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டு மிக மோசமாகத் தாக்கப்பட்ட பின்னர் இணுவில் பகுதியிலுள்ள ஒழுங்கை ஒன்றில் இருந்து மீட்கப்பட்டார். அவரைக் கோப்பாய் பொலீஸார் மீட்டெடுத்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். (16ஆம் பக்கம் பார்க்க)

## இயன்மாட்டின் 13 ஆம் திகதி புலிகளைச் சந்தித்துப் பேச்சு!

யுத்தநிறுத்த சூழலைச் செம்மையாகப் பேணுவதற்கான வழிமுறைகள் குறித்து ஆராய்வதற்காக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவரும் நோர்வேயின் விசேட தூதருமான புறுவ் ஹொவ்டே எதிர்வரும் 13ஆம் திகதி கிளிநொச்சி வருகின்றார். அவருடன் மனித உரிமைகள் ஆர்வலரான இயன் மார்டினும் கிளிநொச்சி வருகின்றார்.

இருவரும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினருடன் பேச்சுகளை நடத்துவர்.

யுத்தநிறுத்த சூழல் நெருக்கடி நிலைக்குள் சிக்கியுள்ளதால், அந்த நிலையைச் சீராக்குவதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து (16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகரத்தில் குடும்பஸ்தர் நடுவீதியில் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,ஒக்.8

யாழ்ப்பாணம், பிரதான வீதியில் அமைந்துள்ள புனிதவள கத்தோலிக்க அச்சகம் முன்பாக நேற்றுக்காலை 8.30 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் இனம்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொழும்புத்துறை இலந்தைக்குளம் விதானையார் வீதியில் வசிக்கும் இரண்டு பிள்ளைகளின் தந்தையான 45 வயதுடைய கந்தசாமி செந்தில்குமரன் என்பவரே கொல்லப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் இலந்தைக்குளம் பிள்ளையார் கோயிலின் நிர்வாகத் தலைவராகவும் சில தனியார் நிறுவனங்களின் கணக்காய்வாளராகவும் பணியாற்றி வந்தார் .

தனது பிள்ளைகள் இருவரையும் யாழ். நகரப் பகுதியில் அமைந்துள்ள பாடசாலையில் இறக்கிவிட்டு கடையில் பொருள்களை வாங்கிக் கொண்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிய போதே இவர் சுடப்பட்டார். (16ஆம் பக்கம் பார்க்க)

## விஞ்ஞாபனத்தில் சு.கவின் கொள்கைகள் 'அவுட்'!

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்காக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தயாரிக்கும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகள் பல உள்ளடங்காமல்போகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிப்பதற் (16ஆம் பக்கம் பார்க்க)

## விநாயகபுரத்தில் கிரனேட் வீச்சு! இருவர் பலி; எட்டுப்பேர் காயம்!

மட்டக்களப்பு,ஒக்.8

மட்டக்களப்பு, வாழைச்சேனை விநாயகபுரம் பகுதியில் நேற்று மாலை 6.45 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் நடத்திய கிரனேட் தாக்குதலில் கூலித் தொழிலாளர்கள் இருவர் உயிரிழந்தனர். எட்டுப்பேர் காயமடைந்தனர்.

விநாயகபுரம், நான்காம் குறுக்கு வீதியில் கடை ஒன்றின் அருகே ஊதியம் பெறுவதற்காக நின்றிருந்த கூலித் தொழிலாளர்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

மோட்டார் சைக்கிளில் வந்த இரு நபர்கள் தொழிலாளர்களை நோக்கி கிரனேட் வீசிய பின் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர் என்று கூறப்படுகிறது.

விநாயகபுரத்தைச் சேர்ந்த செல்வராசா செல்வகுமார்(வயது 14), ஆறுமுகம் பரந்தாமன்(வயது 26) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர். காயமடைந்த எட்டுத் தொழிலாளர்கள் வாழைச்சேனை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

ஆழிப்பேரலை.அனர்த்த மீள்கட்டுமானப் பணிகளில் இவர்கள் கூலித் தொழிலாளர்களாகப் பணிபுரிகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-ரி)

## அமைதிக்கான நோபல் பரிசு



இந்த வருடத்திற்கான நோபல் அமைதிப் புரிசு சர்வதேச அணு ஆற்றல் கண்காணிப்பு நிறுவனத்திற்கும் எகிப்து நாட்டைச்சேர்ந்த அவ்வமைப்பின் இயக்குநர் முகம்மது எல் பரடேக்கு வழங்கப்படுகிறது.

அணு சக்தியை பாதுகாப்பான முறையில் அமைதி வழியிலும் மட்டுமே பயன்படுத்த வேண்டும். இராணுவ நோக்கங்களுக்கு பயன்படுத்தக்கூடாது என்பதை வலியுறுத்தி இவர்கள் செய்துவரும் பணிக்காக அமைதிப் பரிசை இவர்களுக்கு வழங்கு வதாக (16ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். பல்கலைக்கழக 2ஆம் நாள் பட்டமளிப்பு விழா காட்சிகள்








யாழ். பல்கலைக்கழக 24ஆவது பட்டமளிப்பு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நேற்று யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றன. அதன்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. மங்கள வாத்தியங்கள் இசைக்கப்படுவதையும் துறைசார்ந்தோர் அணிவகுத்துச் செல்வதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம். கௌரவ விஞ்ஞானக் கலாநிதிப் பட்டம் பெறுவதற்கு மேடையில் கணிதப் பேராசிரியர் வேலுப்பிள்ளை தர்மரட்ணம் அமர்ந்திருப்பதையும் பட்டம் பெறுவோரில் ஒரு தொகுதியினர் அணிவகுத்துச் செல்வதனையும் மூன்றாம் நான்காம் படங்களில் காணலாம். பீடாதிபதிகள், வேந்தர் பேராசிரியர் எம்.சிவசூரிய, துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் ஆகியோர் பட்டு, குடை, ஆலவட்டம் சகிதம் அழைத்துவரப்படுவதையும் ஏனைய

(படங்கள்: பகீரதன்)

## இரண்டாம் நாள் பட்டமளிப்பு கோலாகலமாக நடந்தேறியது

யாழ்ப்பாணம்,ஒக்.8

யாழ். பல்கலைக்கழகத்தின் 24ஆவது பட்டமளிப்பு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நேற்று சிறப்பாக நடைபெற்றன.

நேற்றும் 5 அமர்வுகளில் பட்டங்கள் வழங்கப்பட்டன. நிகழ்வுகள் காலை 9மணிக்கு ஆரம்பமாகின.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தலைமையில் நடைபெற்ற விழாவில் வேந்தர் பேராசிரியர் எம்.சிவசூரிய பட்டங்களை வழங்கினார்.

நேற்று இடம்பெற்ற முதலாவது அமர்வில் வைத்தியகலாநிதி செல்வி நவமலர் கனகரத்தினத்திற்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது.

இரண்டாம் அமர்வில் பேராசிரியர் வேலுப்பிள்ளை தர்மரட்ணத்திற்கு கௌரவ விஞ்ஞான கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது.

நான்காவது அமர்வில் வித்துவான் சவரிமுத்து அடைக்கலமுத்துவுக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர். (ஐ-12)

## மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாக வடக்கு - கிழக்கில் தீவிர பிரசாரம்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவிப்பு

கொழும்பு,ஒக்.8

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவை வெற்றிபெறச் செய்யும் வகையில் வடக்கு - கிழக்கில் தேர்தல் பிரசாரங்களை மும்முரமாக மேற்கொள்ளவுள்ளதாக ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா சிங்களப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் தேர்தல் பிரசாரப் பிரசுரங்களை விநியோகிப்பதோடு, தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பாக மேற்கொள்ளப்படவுள்ள செயற்பாடுகள் பற்றி தமது கட்சியின் ஒலிபரப்புச் சேவையூடாக மக்களுக்கு அறிவுறுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நாடு துண்டாடப்படுவதை - மீண்டும் யுத்தம் உருவாவதை மக்கள் விரும்பவில்லை. இந்த இரு செயற்பாடுகளும் இடம்பெறமாட்டாது என்று தமிழ் மக்களுக்கு உறுதி வழங்கப்படும் வகையில் மும்முரமாக தேர்தல் பிரசாரம் மேற்கொள்ளப்படும்.

ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெலஉறுமய ஆகிய இரு கட்சிகளும் நாட்டின் முக்கிய பிரச்சினைகளின் தீர்வுக்குத் தாம் ஒத்துழைப்பு வழங்குவதாக பிரதமரிடம் உறுதி வழங்கியுள்ளன.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைத் திருப்திப்படுத்த எம்மால் முடியாது. தமிழ் மக்களின் கருத்தைக் கவருவதற்குப் பதிலாக பிரபாகரனின் மனதைக் கவரவே கடந்த கால அரசுகள் இன்றுவரை முயன்றுள்ளன. அந்த முயற்சிகள் இன்றளவிலாவது நிறுத்தப்படவேண்டும்.

தமிழ் மக்கள் மத்தியில் பல பிரச்சினைகள் உள்ளன. அந்தப் பிரச்சினைகள் உணரப்பட்டுத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றி தெளிவாக உணர்ந்து கொண்டுள்ளார்.

ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெற்று அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் தகுந்த நடவடிக்கைகளை அவரால் நடைமுறைப்படுத்த முடியும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 'திவயின' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார். (எ-206)




நேற்றுக் காலை யாழ். பிரதான வீதியில் - புனித வளன் கத்தோலிக்க அச்சகத்திற்கு முன்பாக - சுட்டுக்கொல்லப்பட்ட குடும்பஸ்தரின் சடலம் வீதியில் கிடப்பதை முதல் படத்திலும் -

யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் சம்பவ இடத்தைப் பார்வையிடுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: பிரபா)

## சிறுவர்தின விழா

யாழ்ப்பாணம்,ஒக்.8

வளர்மதி நிறைவாழ்வக சர்வதேச சிறுவர் தின விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழக வேலாயுதபிள்ளை அரங்கில் இடம்பெறவுள்ளது.

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழக மகளிர் குழு தலைவியும் அதிபருமான செல்வி கமலநாயகி கதிர்காமலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வைத்திய கலாநிதி ந. அரவிந்தன் மற்றும் திருமதி சுபாசினி அரவிந்தன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். (ஐ-9)




## இறுவட்டு வெளியீடு

வல்லிபுர ஆழ்வார் பக்திப்பாமாலை இறுவட்டு வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் வாழ்த்துரைகளை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், யாழ். கோட்டக் கல்வி அதிகாரி எஸ். தங்கராசா ஆகியோர் வழங்குவர். (ஐ-9)

## ஆங்கில வகுப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.8

மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்க அங்கத்தவர்களுக்கான பிரத்தியேக ஆங்கில வகுப்புகள் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

இந்த ஆங்கில வகுப்புகள் வாரந்தோறும் சனி, ஞாயிறு தினங்களில் இடம்பெறவுள்ளதென்றும் -கல்வி கற்க விரும்பும் அங்கத்தவர்கள் தவறாது சமுகமளிக்குமாறும் சங்க நிர்வாகத்தினர் கூறியுள்ளனர். (ஐ-ரி)

## மின் பாய்ந்து வயோதிப மாது மரணம்!

யாழ்ப்பாணம்,ஒக்.8

மின்சார ஒழுக்கில் சிக்கி வயோதிப மாது ஒருவர் உயிரிழந்தார்.

புன்னாலைக்கட்டுவன் ஈவினைப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த 65 வயதுடைய பா.செல்வராணி என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்றுக்காலை குளிப்பதற்காக தண்ணீர் மோட்டரின் மின் ஆழியை அழுத்தச் சென்றபோது மின் ஒழுக்கில் சிக்கினார் என்று கூறப்பட்டது.

சடலம் யாழ்.ஆஸ்பத்திரியின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## இது இலங்கையில் தொடர்கதை

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டதோடு தென்னிலங்கையில் தேர்தல் விவகாரம் உச்சக்கட்டத்தில் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரம்தான் இந்த ஜனநாயகத் தேர்தலில் மைய விடயமாக்கப்பட்டிருப்பதால், இலங்கையின் முன்னாள் தமிழ்,சிங்களத் தலைவர்கள் இருவர் 'ஜனநாயகம்' குறித்தும், 'இனப் பிரச்சினைக்கான தீர்வு' குறித்தும் கடந்த காலங்களில் குறிப்பிட்ட சில கருத்துகளை இங்கு நோக்குவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகின்றோம்.

ஒருவர் முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா. மற்றவர் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்.

இலங்கை சுதந்திரம் பெற்ற 1948ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் சிங்கள மஹாசபையின் முன்னால் உரையாற்றிய எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா "ஆசிய நாடுகளில் ஜனநாயகம் கனகச்சிதமாகப் பொருந்துவதற்குச் சரியான இடம் இலங்கைதான். அதை வெற்றிகரமாக நிறைவேற்றி ஆசிய நாடுகளுக்கு முன்மாதிரியாகத் திகழ்வதோடு மட்டுமல்லாமல், அதன்மூலம் கிழக்குக்கும் மேற்குக்கும் இடையில் இணைப்புப் பாலமாக இலங்கை விளங்கும்."- என்று தமது கனவை உரைத்தார்.

ஆனால்,இறுதியில் நடந்தது என்ன? தாம் கண்ட கனவை, நனவாகவிடாமல் அவரே கலைத்தார்.

ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்கவேண்டும் என்ற ஒரே சுயலாபத்துக்காக ஜனநாயகக் கோட்பாடுகளின் எதிர்காலத்தையே கேள்விக்கு உள்ளாக்கும் விதத்தில், ஜனநாயகத் தேர்தல் செயற்பாட்டுக்குள் பேரினவாதப் போக்கைத் திணித்து, அந்த முறையையே கெடுத்தார் பண்டாரநாயக்கா. பத்து ஆண்டுகளுக்கு முன்னர் தாம் உரைத்த உன்னதக் கொள்கையை ஆட்சியைப் பிடிக்கும் கனவுக்காக ஐம்பதுகளின் பிற்பகுதிகளில் அவரே உதைத்துத் தள்ளினார்.

அதிகாரத்தைக் கைப்பற்றும் ஒரே நோக்கிற்காக இன்றைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் சிங்கள - பௌத்த பேரினவாதத்தைத் தேடிச்சென்று அதனை ஆகர்ஷித்து, அரவணைத்துக் கொள்வதைப் பார்த்தால், அமரர் எஸ். டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்காவின், மற்றொரு தொண்டன் அவரது கட்சிக்குள் இருந்து அப்படியே தப்பாமல் இப்போது வெளிவந்திருக்கிறார் என்பது தெளிவாகியிருக்கின்றது.

தங்களுடைய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வைத் தேடி, அமைதி வழியில் - அஹிம்சை முறையில் - சத்திய சோதனை நடத்திய தமிழர்கள், அது பயன்தராத நிலையில் ஆயுதவழிப் போராட்டத்துக்குத் திரும்பி இரண்டு தசாப்தகாலமாகிவிட்டது. இந்தச் சூழ்நிலையில், தமது ஆயுதப் போராட்டத்துக்குச் சற்று ஓய்வு கொடுத்துவிட்டு, சமாதான முறையில் தீர்வு காண வழிவிட்டு அவர்கள் காத்து நிற்கின்றார்கள்.

பிரிந்து சென்று தனியரசு அமைப்பதே தமது பிரச்சினைக்கு ஒரே தீர்வு என்ற உண்மையை வெளிப்படுத்தி, அந்தத் திசையில் கணிசமான தூரம்வரை முன்னேறிய தமிழர்கள், அமைதித் தீர்வுக்காக அந்த இலக்கிலிருந்து சற்று விலகி, உச்சமட்ட விட்டுக்கொடுப்பாக சமஷ்டித் தீர்வுக்கு இறங்கி வந்திருக்கின்றனர்.

ஆனால், சமஷ்டித் தீர்வை நிராகரிக்கும் தென்னிலங்கையின் சிங்கள, பௌத்த பேரினவாதம், அப்படி மறுத்துரைக்கும் தனது மேலாண்மைப் போக்கை இந்த ஜனாதிபதித் தேர்தலில் தனது கோஷமாகவும் முன்வைத்திருக்கிறது.

41 ஆண்டுகளுக்கு முன்னர் 1964 நடுப்பகுதியில் இந்த விடயம் குறித்து சமஷ்டிக் கட்சியின் (தமிழரசுக் கட்சியின்) அப்போதைய இளம் தமிழ்த் தலைவர் அ.அமிர்தலிங்கம் இவ்விடயம் குறித்துத் தீர்க்கதரிசனத்தோடு கூறிய கருத்துகள் இங்கு கவனிக்கத்தக்கனவாக அமைகின்றன.

"தென்னிலங்கையில் நடக்கும் சம்பவங்களை நோக்கும்போது ,'ஐக்கியம்' ஆக வாழ்வதற்கான நம்பிக்கை மேலும் மேலும் கைநழுவி வருகின்றது என்ற மாற்றமுடியாத தீர்மானத்துக்கே எம்மை அவை இட்டுச்செல்கின்றன. சிங்களத் தலைவர்கள் தமது இந்தக் கடும்போக்கில் விடாப்பிடியாக இருப்பார்களேயானால், நீங்கள் தீர்வுக்கான வழியாக சமஷ்டியைப் பிரசாரப்படுத்தும் நிலைக்கு வரும்போது நாம் நாட்டைப் பிரிப்பதற்கான வழியைத் தேர்ந்தெடுத்திருப்போம். பல உயிர்களின் இழப்போடும், தேவைப்பட்டால் எங்கள் உயிரை இழந்தும் அதைப் பெறுவதற்கு நாம் தீர்மானித்திருப்போம் என்பதை நான் இப்போதே கூறிவைக்க விரும்புகிறேன். ஒரு தேசியம் என்ற வகையில் இந்தத் தீவில் சுயகௌரவமற்ற நிரந்தர அடிமைகளாகச் சரணடைவதை விட, இந்த நாட்டைத் துண்டாடுவதையே ஒரே மார்க்கமாக அப்போது நாம் தேர்ந்தெடுத்திருப்போம்."-இப்படித்தான் நான்கு தசாப்தகாலத்துக்கு முன்னர் அமிர்தலிங்கம் எச்சரித்திருந்தார்.

அந்தப் பிரிவினைக்கான நிலைமை இலங்கைத் தீவில் உச்சத்துக்கு வந்திருக்கும் நிலையிலும்கூட - அதிலிருந்து சற்றுக் கீழ் இறங்கி,விட்டுக்கொடுத்து, சமஷ்டி அடிப்படையில் தீர்வுகாண தமிழர்களின் தலைமை இணங்கியுள்ள நிலையிலும் கூட - பேரினவாதம் தனது அடக்குமுறை எதேச்சதிகாரத்திலிருந்து இறங்கிவருவதாக இல்லை.

"ஜனநாயகத்தின் வெற்றியை நிரூபிக்கும் நாடாக இலங்கை விளங்கும்"- என்று கனவுகண்ட பண்டாரநாயக்கா, அந்தக் கனவைத் தாமே கெடுத்து நாட்டைச் சின்னாபின்னமாக்குவதற்கான பேரினவாதத்தை அரசியலில் வெற்றிகரமாக விதைத்தார். அது அவரது கட்சியினர் மற்றும் தொண்டர்கள் ஊடாகத் தொடர்கிறது. அவ்வளவுதான்.

# குடாநாட்டில் வாங்கும் மோ.சைக்கிள்களை யாழ்.அலுவலகத்திலேயே பதிவு செய்யுங்கள்!

## மோட்டார் திணைக்கள அதிகாரி அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,ஒக்.8

யாழ்.மாவட்டத்தில் கொள்வனவு செய்யப்படும் மோட்டார் சைக்கிள்களின் பதிவுகளை நேரடியாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் பதிவு செய்வதே சிறந்தது.

இவ்வாறு மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாவட்டத்தில் விற்பனை செய்யப்படும் புதிய மோட்டார் சைக்கிள்களின் பதிவானது இத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், தற்போது விற்பனை செய்யப்படும் நிறுவனத்தினரால் (மோட்டார் சைக்கிள் இறக்குமதி நிறுவனங்களின் ஏக விநியோகஸ்தர்களால்) நேரடியாக கொழும்பு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திலும் பதிவு செய்யப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் யாழ்.மாவட்டத்தில் கொள்வனவு செய்யப்படும் புதிய மோட்டார் சைக்கிள்களை இத் திணைக்களத்தில் பதிவுசெய்வதன்மூலம் உரிமையாளர்களும் மற்றும் இவ்வாகனங்களை உடமைமாற்றம் செய்யுமிடத்து அதன் புதிய உரிமையாளர்களும் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் வருமாறு:-

1. கொள்வனவு செய்யப்படும் மோட்டார் சைக்கிள்களை உரிய திகதிக்குள் (கொள்வனவு செய்து 30 வேலை நாள்களுக்குள்) பதிவுசெய்ய விண்ணப்பிக்குமிடத்து விண்ணப்பக் கட்டணம் ரூபா. 1400.00 மட்டுமே.

2. புதிய பதிவிற்காக விண்ணப்பித்து வாகனப் பரிசோதனை செய்த திகதியிலிருந்து 5வேலை நாள்களுக்குள் வாகனப் பதிவுச் சான்றிதழ், வாகன அடையாள அட்டை, வாகன இலக்கத் தகடு ஆகியவற்றை இத்திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

3. இத்திணைக்களத்திலேயே பதிவு செய்யப்படும் வாகனங்களின் ஆவணங்கள் பேணப்படுவதால் வாகனப் பதிவுச் சான்றிதழ், வாகன அடையாள அட்டை தொலையுமிடத்து அதன் பிரதிகளைப் பெறுதல், பதிவுச் சான்றிதழில் மாற்றங்கள் மேற்கொள்ளல், வாகனத்தின் விவரங்களைப் பெறுதல் ஆகிய செயற்பாடுகளை இத்திணைக்களத்திலேயே விண்ணப்பித்து உடன் பெறுக்கொள்ள முடியும். (இதன்போது ஆவணங்களை கொழும்பிற்கு அனுப்பி பெறவேண்டியநிலை இல்லாதிருப்பதுடன் பொதுமக்கள் தமது சகல தேவைகட்கும் இத்திணைக்களத்துடனேயே தொடர்புகளை மேற்கொண்டால் மட்டும் போதுமானதாக அமைகிறது)

4. இதேபோன்று மேற்படி வாகனங்களை உடமைமாற்றம் செய்யுமிடத்து அவ்வாகனங்களை புதிதாகக் கொள்வனவு செய்தவர்கள் தமது விண்ணப்பங்களை தமது பிரதேச செயலகம் ஊடாக எமக்கு அனுப்பிவைப்பதன் மூலம் வாகன உடமை மாற்றங்களை இத் திணைக்களத்திலேயே இலகுவாக மேற்கொள்ளமுடியும். இத் திணைக்களத்திற்கு பிரதேச செயலகத்திலிருந்து விண்ணப்பங்கள் கிடைத்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் வாகனப் பதிவுச் சான்றிதழ், வாகன அடையாள அட்டை என்பவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும். இதன்போதும் ஆவணங்களை கொழும்பிற்கு அனுப்பிப் பெற வேண்டிய நிலை இல்லாதிருப்பதுடன் பொதுமக்கள் தமது சகல தேவைகளுக்கும் இத்திணைக்களத்துடனேயே தொடர்புகளை மேற்கொண்டால் மட்டும் போதுமானதாக அமைகிறது.

விற்பனை செய்யப்படும் நிறுவனம் ஊடாக (மோட்டார் சைக்கிள் இறக்குமதி நிறுவனங்களின் ஏக விநியோகஸ்தர்கள் மூலம்) நேரடியாக கொழும்பு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்யப்படும் மோட்டார் சைக்கிள்களின் உரிமையாளர்கள் அவர்களது வாகனம் தொடர்பான சகல தொடர்புகளுக்கும் அவர்களின் வாகனம் தொடர்பான பதிவுகள் எதுவும் இத்திணைக்களத்தில் இல்லாதமையால் நேரடியாக கொழும்பு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துடனேயே தொடர்பு கொள்ள வேண்டிய நிலை உள்ளமை இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டியது என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-202-203)

## முதலாவது பெண் மாவீரர் மாலதியின் நினைவு தினம் திங்களன்று அனுஷ்டிப்பு

அச்சுவேலி,ஒக்.8

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது பெண் மாவீரர் 2ஆம் லெப். மாலதியின் 18ஆவது நினைவு நாள் நிகழ்வு நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் கைதடி வீதியில் அவர் தற்கொடை ஈந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபி முன்பாக நடைபெறவுள்ளது.

நினைவுதின நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் கோப்பாய் பிரதேச எழுச்சிப் பேரவைத் தலைவர் டாக்டர் விஜயன் தலைமையில் நடைபெற்றது.

ஆலோசனைக் கூட்டத்தில் கோப்பாய் பிரதேச பொது அமைப்புகள் மற்றும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணியளவில் கோப்பாய் சந்தியில் இருந்து நினைவுப் பேரணி புறப்பட்டு கோப்பாய் கைதடி வீதியில் அமைந்துள்ள மாலதி நினைவுத் தூபியைச் சென்றடையும். அங்கு நினைவு நிகழ்வு நிகழ்த்தப்படவுள்ளது.

இந்த நினைவு நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கோப்பாய் பிரதேச எழுச்சிப் பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ஒ-11)

## நீதிமன்றப் பொறுப்பிலுள்ள சிசுவை தத்துக் கொடுக்க நடவடிக்கை

தென்மராட்சி,ஒக்.8

சாவகச்சேரி நீதிமன்றப் பொறுப்பிலுள்ள சிசுவை தகுதியான குடும்பம் ஒன்றிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த மாதம் கைதடிப் பகுதியில் அநாதரவான நிலையில் இந்தச் சிசு கைவிடப்பட்டிருந்தது. சாவகச்சேரிப் பொலீஸார் சிசுவைக் காப்பாற்றினர். சாவகச்சேரி நீதிமன்றப் பொறுப்பில் அந்தச் சிசு பராமரிக்கப்படுகிறது. ஆனால், இதுவரை தாயார் உட்பட எவ ரும் சிசுவை உரிமைகோரி நீதிமன்றத்தை அணுகவில்லை. இந்நிலையில் பிற்கால நலன் கருதி தகுதியானகுடும்பம் ஒன்றிடம் சிசுவை தத்துக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிசுவை சட்டபூர்வமாகத் தத்தெடுக்க விரும்புவோர் தமது எழுத்துமூலமான விண்ணப்பத்தை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றப் பதிவாளரிடம் சேர்ப்பிக்கலாம்.

விண்ணப்பத்தில் நீதிமன்றினால் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்தினை குறிப்பிடுமாறும்-

கிடைக்கும் விண்ணப்பங்கள் நிதித்துறையுடன் தொடர்புடைய உயர்மட்டக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு தகுதியான குடும்பத்திடம் சிசு வழங்கப்படும் என்றும்- பதிவாளர் அறிவித்துள்ளார். (ஒ-117)


### நாளை

புரட்டாதி 23
ஞாயிற்றுக்கிழமை
09.10.2005
திதி: ஷஷ்டி
பிற்பகல் 01.21 வரை
நட்சத்திரம் : கேட்டை
முற்பகல் 06.52 வரை
சுபநேரம்: 09.02 - 10.32
ராகுகாலம்: 04.32 - 06.02
(யாவும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நீ வாழ்க்கையில் எவ்வாறு உயர்வது என்று நினைத்துப்பார்; மற்றவர்கள் உயர்ந்துவிடுவார்களோ என்று நினைக்காதே.

- ஓர் அறிஞர்



# வலி.மேற்கில் ஒருமாத காலப்பகுதியில் 650 பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் விநியோகம்

வலி.மேற்கு,ஒக்.8

கடந்த ஒரு மாத காலத்தில் மட்டும் வலி. மேற்கு பிரதேச செயலகத்தில் 650 பேருக்கு பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்கள் வழங்கப் பட்டுள்ளன.

பதிவாளர் நாயகத்தின் கடமைகள் பிரதேச செயலகங்களுக்கு பகிர்ந்தளிக்கப் பட்டதைத் தொடர்ந்துகடந்த ஒரு மாத காலத்தில் பொதுமக்களிடமிருந்து பிறப்பு, இறப்பு, விவாகச்சான்றிதழ்களுக்கு சுமார் 750 விண்ணப்பங்கள் கிடைத்தன என்றும்-

இவற்றுள் 650விண்ணப்பங்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது என்றும்-

பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக பிரதேச செயலர் மேலும் தெரிவிக்கையில்:

பதிவு இலக்கம், பதிவுத் திகதி தெரியும் விண்ணப்பங்களுக்கு அலுவலகத்தில் ஒரே யொரு போட்டோ பிரதி இயந்திரம் இருப் பதனால் அன்றைய தினமே சான்றிதழ்களை வழங்க முடியாமல் உள்ளது என்றும்-

அடுத்த நாளே சான்றிதழை விநியோகிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும்-

பதிவு இலக்கம், பதிவுத் திகதி தெரியாத விண்ணப்பங்களுக்கு மூன்று நாள்களில் சான்றிதழ்கள் வழங்கப்படுவதாகவும் - பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (எ-175)

## பல்லாண்டு வாழி! வாழி!!





யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலாநிதிப்பட்டம் பெற்ற

இவர்களைப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துவதுடன், மேன்மேலும் சிறப்புற தாவடி அருள்மிகு அம்பலவாண வேதவிநாயகனை இறைஞ்சுகின்றோம்.

திரு. பொன்னம்பலம் இராமநாதன்
சித்த மருத்துவத்துறை
சிரேஷ்ட விரிவுரையாளர்.

திருமதி கலைவாணி இராமநாதன்
இந்துநாகரிகத்துறை
சிரேஷ்ட விரிவுரையாளர்

திரு திருமதி பரந்தாமன் தம்பதிகள்.
இணுவில்.

# மதிலுடன் மோ. சைக்கிள் மோதியதில் அதனைச் செலுத்திச் சென்றவர் பலி!

யாழ்ப்பாணம்,ஒக்.8

வேலணை, துறையூர்ப் பகுதியில் மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து மதிலுடன் மோதியதில் அதனைச் செலுத்திச் சென்றவர் படுகாயமடைந்து பரிதாபகரமாக உயிரிழந்தார்.

புங்குடுதீவு, 12 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த லோரன்ஸ் யோகரட்ணம் (வயது 25) என்பவரே இதில் நேற்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்ப் பாணத்தில் இருந்து மோட்டார் சைக்கிளில் இவரும் மற்றொருவரும் புங்குடுதீவில் உள்ள தமது வீட்டிற்குச் சென்றபோதே விபத்து இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் உயிரிழந்த லோரன்ஸ் யேசுரட்ணத்தின் சடலம் நேற்றுப் பிற்பகல் யாழ். போதனாவைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

குமரகுரு துஷியந்தன்
கலைமாணி
(B.A.Hons)





சரவணமுத்து கருணாகரன்
கலைமாணி
(B.A.Hons)

06-10-2005 வியாழக்கிழமை யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற இவர்களை மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

(41031)
(26-54-15-17)

வாழ்த்துபவர்கள் :- நவக்கிரி நண்பர்கள்.

**நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சு**
**வடக்கு - கிழக்கு மாகாண சபை**

**சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக் கட்டியெழுப்பும் திட்டம் (TAARP)**

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது.

“ஆஅவ.கடன் இல.0006 SRI (SF)

கேள்விகோரல் - இல.01

நிகோட் - முல்லைத்தீவு

**முல்லைத்தீவு கட்டடங்கள் திணைக்கள அலுவலகமும், விடுதியும் நிர்மாணம்**

மேற்படி வேலைக்குரிய ஒப்பந்த ஆவணங்கள் வழங்கும் திகதி 2005.10.14ஆம் திகதி பிற்பகல் 3 மணிவரையும் கேள்வி சமர்ப்பிக்கும் திகதி 2005.10.21ஆம் திகதி மு.ப.10.30 மணிவரையும் நீடிக்கப்பட்டுள்ளதென்பதை அறியத்தருகின்றேன். ஏனைய விவரங்கள் முன்னைய விளம்பரத்தில் குறிப்பிட்டவாறே இருக்கும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**திருமதி இமெல்டா சுகுமார்**
அரச அதிபர், முல்லைத்தீவு

(சி/45503)(26-54-15-17)

# பல்கலையில் கலைவிழா

யாழ்ப்பாணம்,ஒக்.8

யாழ். பல்கலைக்கழக 24 ஆவது பொதுப் பட்டமளிப்பை முன்னிட்டு இன்று சனிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கலை நிகழ்வு கள் இடம்பெறவுள்ளன.

இராமநாதன் நுண்கலைத்துறை சங்கீத, நாட்டிய கற்கைநெறி மாணவர்கள் வழங் கும் நடனம், பாட்டு ஆகியவை இடம்பெறும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக வேந்தர் பேராசிரியர் ம. சிவசூரிய, பதில் துணைவேந்தர் பேராசிரியர் இரா. சிவச் சந்திரன் ஆகியோர் கலந்துகொள்வர்.

இந்நிகழ்வை ஆர்வமுள்ள எவரும் பார்வையிடலாம் என்று தெரிவிக்கப்பட் டது. (ஒ-202)

# பாடசாலைகளில் இன்று கணிப்பீட்டுத் தினம்

யாழ்ப்பாணம்,ஒக்.8

பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் தினம் இன்று வெள்ளிக்கிழமை சகல பாடசாலை களிலும் அனுஷ்டிக்கப்படவுள்ளது. பெற்றோர், மாணவர்கள் மத்தியில் பாடசாலை மட்டக் கணிப்பீடு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் தினத்தை பாடசாலைகளில் ஏற்பாடுசெய்து நடத்துமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இன்று பாடசாலைகளில் நடைபெறும் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் தினத்தில் மாணவர்களின் பெற்றோர்கள் பாட சாலைக்கு அழைக்கப்பட்டு கணிப்பீடு தொடர்பான அம்சங்களை உள்ளடக்கி கண்காட்சி, கருத்தரங்கு, கணிப்பீட்டுக் கருவிகள் தொடர்பான செயற்பாடுகள் என்பன நடைபெறும். கணிப்பீடு தொடர் பான கலை நிகழ்வுகளும் நடைபெறவுள் ளன. (எ-11)

# நியாப் திட்டத்தின் உதவியுடன் சங்குவேலியில் கலாசார மண்டபம்

வலி. தெற்கு,ஒக்.8

சங்குவேலியில் நியாப் திட்டத்தின் கீழ் கலாசார மண்டபம் நிர்மாணிக்கப்படவுள் ளது.

இது தொடர்பான கலந்துரையாடலில் வலிகாமம் தெற்குப் பிரதேச செயலத்தால் பிரதேச செயலர் எஸ். திருவாகரன் தலைமை யில் அண்மையில் நடைபெற்றுள்ளது.

நியாப் திட்டப்பணிப்பாளர் எஸ். பாலகிருஷ்ணன், சங்குவேலி கிராம சேவையாளர் மு. பாஸ்கரகுமார் உட்படப் பலர் இந் நிகழ்வில் கலந்த கொண்டனர்.

சங்குவேலி யில் சுமார் 9 லட்சம் ரூபா செலவில் இந்தக் கலாச்சார மண்டத்தை அமைப்பது என்றும் -

சங்குவேலி சிவஞானப்பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையில் இதனை அமைப்பது என்னும் - இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது . (எ-152-203)

# திறந்த பல்கலைப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக்.8

யாழ். திறந்த பல்கலைக்கழகம் நடத்தும் மேற்கல்வி டிப்ளோமா மாணவர்களுக் கான இறுதியாண்டு பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்று பிராந்திய இயக்குநர் எந்திரி சா. ஆ. ஞானேந்திரன் தெரிவித்துள்ளார். (எ-7)

உ
சிவமயம்

**இளங்கலைஞர் மன்றம் நடத்தும் 2005 ஆண்டு**

## வாணிவிழா

இடம்: இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபம்
காலம்: 08.10.2005 முதல் 10.10.2005 வரை மூன்று நாள்கள்
நேரம்: மாலை 5.30 மணிமுதல் 8.30 மணி வரை

*இசை ரசிகர்கள், ஆதரவாளர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

**08.10.2005 சனிக்கிழமை**
**முதலாம் நாள் நிகழ்ச்சி நிரல்**

மாலை 5.25 மங்கள விளக்கேற்றல்
மாலை 5.30 - 6.30 வரை மங்கள இசை
ஈழ நல்லூர்
P.S. பாலமுருகன்
P.S. செந்தில்நாதன் குழுவினர்.

இரவு 6.30 - 7.15 வரை இசைக்கச்சேரி
பாட்டு - ஸ்ரீ.நந்தகோபன்
வயலின் - A. ஜெயராம்
மிருதங்கம் - S. கமலதாஸ்
முகர்சிங் - S.விமல்சங்கர்
கடம் - M.லோகேந்திரன்

*இரவு 7.15 - 7.30 பிரதம விருந்தினர் உரை*
திரு.இ. ஏகநாதன் அவர்கள்
ஒய்வுபெற்ற மாவட்ட நீதிபதி

7.30 - 8.30 யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள் வழங்கும்

**"நாட்டியாஞ்சலி"**

தயாரித்து வழங்குபவர் -
திருமதி வசந்தி குஞ்சிதபாதம் அவர்கள்
நட்டுவாங்கம்:- திருமதி வசந்தி குஞ்சிதபாதம்
மிருதங்கம்: - மகேந்திரன் லோகேந்திரன்
பாட்டு:- K. சந்திராதேவி, S.தேவலோஜினி
வயலின்: - A.ஜெயராமன்
ஒகன்:- N.செல்வச்சந்திரன்

சட்டநாதர் வீதி,
நல்லூர்.

**இளங்கலைஞர் மன்றம்.**

(சி-45501) (26-54-15-17)

**ஆசிரியர் திரு.மு.வே.அன்பழகன் அவர்களின் தரம் 5 புலமைப்பரிசில் வழிகாட்டல் வகுப்புகள் ஆரம்பமாகின்றன.**

காலம் : 12.10.2005 புதன்கிழமை
பி.ப. 4 மணிக்கு.

இடம் : **அன்பொளி கல்வியகம்**
நீராவியடிப் பிள்ளையார் கோயில் பின் வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு :-
பதிவுகளை முற்கூட்டியே தினமும் பி.ப. 4 - 6 மணி வரை மேற்கொள்ளவும்.

**இயக்குநர்.**

(41040) (26-54-15-17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
29 - 12 - 1934



உதிர்வு
08 - 09 - 2005

### அமரர் பரராசா அன்னரத்தினம்

உழைப்புக்கு ஊக்கம் தந்து
உயர்வுக்கு வழிகாட்டிய
உத்தமரே! தெய்வமே!!
உறங்கியது ஏன்?

கடந்த 08.09.2005 வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது அன்புத்தாயார் பரராசா அன்னரத்தினம் அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (08.10.2005) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற விருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், தம்பி - மச்சாள்மார்.*

“ஆனந்தவாசா”,
தாவடி வடக்கு, கொக்குவில்.

(40254)
(26-54-15-17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கந்தையா கனகரத்தினம்

அன்னை மடியில் 1949-01-31
இறைவன் அடியில் 2004-10-18

அன்புடன் பழகி ஆதரவாய் பேசி பண்புடன் வாழ்ந்த எங்கள் அன்புச் செல்வமே! நீர் மறைந்து ஆண்டு ஒன்று கடந்தாலும் உம்மை மறக்கவேமாட்டோம். ஆத்மாசாந்திபெற ஆண்ட வனை வேண்டுகின்றோம்.

49/5, வில்வந் தெரு வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்

**மனைவி, பிள்ளைகள், மருமகன்.**

(41035)(46-54-15-17)

# வலிகாமம் மேற்குப் பாடசாலை அபிவிருத்திக்கு ஒதுக்கீடு செய்த நிதி திரும்பிவிடும் அபாயம்

## பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பிரஸ்தாபிப்பு

வலி.மேற்கு,ஒக்.8

வலி.மேற்குப் பிரதேச பாடசாலைகளின் கல்வி அபிவிருத்திக்கென ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதி கல்வித் திணைக்களத்தின் அசமந்தப் போக்குக் காரணமாக திரும்பிவரும் அபாயநிலைமை ஏற்பட்டுள்ளதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களினால் வலி.மேற்குப் பிரதேசத்திலுள்ள இருபத்தொரு பாடசாலைகளின் கல்வி அபிவிருத்திக்கென சுமார் 8 லட்சத்து 40 ஆயிரம் ரூபா இந்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்நிதியில் மூன்று பாடசாலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒரு லட்சத்து 80ஆயிரம் ரூபா நிதியினை மட்டும் செலவுசெய்வதற்கு கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் -

மிகுதியாகவுள்ள 6 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவினை செலவு செய்வதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எதுவும் இன்றுவரை குறிப்பிட்ட கல்வித்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படவில்லை என்றும்-அண்மையில் நடைபெற்ற வலி.மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. வலி.மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாக பொது அமைப்புக்களின் உறுப்பினர்கள் கடும் விசனம் தெரிவித்தனர்.

இதற்கிடையில் - கல்வித் திணைக்களம் சார்பில் எவரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

கல்வித் திணைக்களம் சார்பில் எவரும் தொடர்ந்தும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்குபற்றாமல் இருப்பதற்கும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டோரால் கவலை தெரிவிக்கப்பட்டது. (எ-175)

# விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணம் அன்பளிப்பு

நல்லூர் ஒக்.8

நெடுந்தீவில் உள்ள ஐந்து விளையாட்டுக் கழகங்களுக்கு நெடுந்தீவு உதவி அரச அதிபர் பற்றிக் டிறஞ்சன், விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.மகேந்திரன் ஆகியோர் அண்மையில் விளையாட்டு உபகரணங்களைக் கையளித்தனர்.

மேற்படி பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கு வழங்குவதற்கென மாவட்ட செயலகம் அண்மையில் ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களை வழங்கியிருந்தமை தெரிந்ததே. (எ-111)

# சூழல் பாதுகாப்பு வேலைத்திட்டம் குறித்து கருத்தரங்கில் விரிவாக ஆராய்வு

யாழ்ப்பாணம்,ஒக்.8

சூழல் காக்கும் முன்னோடி நாளில் மேற்கொள்ளப்படவேண்டிய சூழல் பாதுகாப்பு சம்பந்தமான வேலைத்திட்டங்கள் குறித்த கலந்துரையாடல் கடந்த செவ்வாயன்று நல்லூரில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி சு.தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாண பிரதேச செயலாளர் எம்.பற்றிக் டிறஞ்சன், நீர் விநியோக வடிகாலமைப்பு பொறியியலாளர் க.பரந்தாமன், யாழ்.மாநகர சபையின் செயலாளர் திருமதி வ.வசந்தகுமார், நல்லூர் பிரதேசசபைச் செயலாளர் பொ.வைரமுத்து, சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.தவநாயகம், யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சொலமன் சூ. சிறில், யாழ்ப்பாண மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை, கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பொ.கமலநாதன் ஆகியோர் உரையாற்றினர். பொலித்தீன் பாவனை எதிர்காலத்தில் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்றும் - எனவே, கழிவுப் பொருள்களை ஏனையோர்களுக்குப் பாதிப்பு இல்லாமலும், சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படாமலும் அகற்ற வேண்டும் என்றும்- இந்தக் கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பாடசாலை அதிபர்கள், பொது அமைப்புகளான கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் அமைப்புகள், சனசமூக நிலையங்கள், ஆலய நிர்வாகத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-68)

# கந்தரோடையில் கிராமிய உற்பத்தி மையம் வியாழனன்று திறந்து வைக்கப்பட்டது

வலி.தெற்கு,ஒக்.8

கந்தரோடை கிராமிய உற்பத்தி மையம் நேற்றுமுன்தினம் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கந்தரோடை விவசாயச் சம்மேளனத்தின் செயலாளர் செ.மகாதேவா தலைமையில நடைபெற்ற இந்த நிகழ்வில், வலி. தெற்குப் பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் கிராமிய உற்பத்தி மையத்தைத் திறந்து வைத்தார்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி முருகன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசைகளைத் தொடர்ந்து பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், பிரமுகர்கள் ஊர்வலமாக உற்பத்தி மையத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் உற்பத்தி மையத்தின் பெயர்ப்பலகையைத் திறந்துவைத்தார்.

கிராமிய உற்பத்தி மையத்தை நிர்மாணித்த எஸ்.மகாதேவன் விழாக் குழுவினரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். கந்தரோடை கிராமத்தின் மூத்த விவசாயிகள் பலர் இதன்போது விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

கமநல சேவை திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன், வலி.தெற்குப் பிரதேச முன்னாள் உதவித் திட்டமிட ல் பணிப்பாளர் திருமதி இ.இராகுநாதன், உடுவில் பெரும்பாக உத்தியோகத்தர் சு.சோதிநாதன், விவசாயப் போதனாசிரியர் ச.சிவநேசன், கிராம சேவையாளர் க.திருநாவுக்கரசு, வலி.தெற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம், பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் ஆகியோர் விழாவில் உரையாற்றினர்.

கிராமிய உற்பத்தி மையத்தின் திறப்பு விழாவைத் தொடர்ந்து விவசாய உள்ளீடுகளின் விற்பனை ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆரம்பநாளில் பெரும் எண்ணிக்கையான விவசாயிகள் உள்ளீடுகளை விலை கொடுத்து வாங்கினர். (எ-152)

## மழை வெள்ளம் பாயும் வாய்க்கால்கள் மூடப்படுவதால்

# ஊரத்தி கிராமம் மீண்டும் வெள்ளத்துள் மூழ்கும் அபாயம்

வலி.மேற்கு,ஒக்.8

அராலி குமுக்கன் குளத்துக்கு மழை நீர் செல்லும் வாய்க்கால்கள் பொதுமக்கள் சிலரால் மூடப்படுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், அராலி ஊரத்தி பகுதி மீண்டும் வெள்ளத்துள் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த 20 வருடங்களாகக் கவனிப்பாரற்றுக் கிடந்த குமுக்கன் குளமும் வாய்க்காலும் கடந்த டிசெம்பர் மாதம் இப்பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தைத் தொடர்ந்து பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸின் முயற்சியினால் புனரமைக்கப்பட்டது.

ஆனால், தற்போது குமுக்கன் குளத்துக்கு மழைவெள்ளம் செல்லும் சகல வாய்க்கால்களும் மக்களினால் குப்பைகள், மணல் என்பன போடப்பட்டு மூடப்பட்டுள்ளன. இந்நிலையில் இந்த வருடமும் இப்பகுதி வெள்ளத்துக்குள் மூழ்கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற வலி.மேற்குப் பிரதேச விவசாயக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பாகப் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அராலிப் பகுதியிலுள்ள விவசாய சம்மேளனத்தினர் கிராம அலுவலர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து தூர்ந்து போன வாய்க்கால்களை புனரமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச செயலர் பணித்துள்ளார். (எ-175)

# மகாத்மா காந்தியின் பிறந்த தினத்தில் 'சத்திய விஞ்ஞானம்' நூல் வெளியீடு

வலி.தெற்கு,ஒக்.8

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற மகாத்மா காந்தி அடிகளின் 138 ஆவது பிறந்த தினக் கொண்டாட்டங்களின் போது புலவர் பாண்டியனார் இ.இரத்தினம் எழுதிய ''சத்திய விஞ்ஞானம்'' என்ற நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு மேற்படி சங்கத் தலைவர் சோ.தம்பிப் பிள்ளையின் தலைமையில் நடைபெற்றுள்ளது.

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி பா. தனபாலன் நூலை வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்தினார்.

கலாபூஷணம் வை.க.சிற்றம்பலம் நூலின் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

நூலின் ஆய்வுரையை வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.சண்முகநாதன் நிழ்த்தினார்.

மகாத்மா காந்தி அடிகள் பற்றிய சிறப்புரையினை கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை அதிபர் க. செல்வக் குமாரன் நிகழ்த்தினார். (எ-152-ரி)




# கோப்பாயில் புற்றுநோய் பரிசோதனை

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பிரதேசத்தில் பொது மக்களுக்கான வாய்ப்புற்றுநோய் பரிசோதனைகள் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளன.

பொதுமக்கள் கீழ்க்குறிப்பிடப்படும் நிலையங்களில் அண்மையில் உள்ள நிலையத்துக்குச் சென்று வைத்திய ஆய்வை மேற்கொள்ளுமாறு கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுள்ளார். இன்று பரிசோதனை இடம்பெறும் இடங்கள் வருமாறு:-

நீர்வேலி கிராமிய அபிவிருத்திச் சங்கம் (காலை), சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, (மாலை), வாதரவத்தை ஆரம்பச் சுகாதார நிலையம் (காலை), புத்தூர் மேற்கு (ஒருபகுதி) கலைமதி சனசமூக நிலையம் (மாலை), புத்தூர் மேற்கு, புத்தூர் கிழக்கு மத்திய மருந்தகம் (முழுநாள்), இடைக்காடு, அச்சுவேலி, சுற்றயல்கூறு வைத்தியாசலை (முழுநாள்), கோப்பாய் நாவலர் பாடசாலை (காலை/மாலை), கட்டைப்பிராய் கல்வியங்காடு கிராமிய அபிவிருத்திச் சங்கம் (காலை), மக்கள் நலன் காக்கும் நிலையம் (மாலை).

நாளை பரிசோதனை நடைபெறும் இடங்கள் வருமாறு:-

கோண்டாவில் மத்தி, அன்னங்கை ம.ம. கோண்டாவில் (முழுநாள்), மஞ்சவனப் பதி ஆறுகால்மடம், கிராம அபிவிருத்திச் சங்கம் (முழுநாள்), உரும்பிராய் மேற்கு ம.ம. (முழுநாள்), உரும்பிராய் ம.ம. உரும்பிராய் (முழுநாள்), திருநெல்வேலி - முத்துத்தம்பிப் பாடசாலை (காலை), அரியாலை ஜெயபாரதி ச.நிலையம் (மாலை), அச்செழு ஆரம்பச் சுகாதார நிலையம் (காலை), ஊரெழு கணேஸ்வரா பாடசால்ல (மாலை).(ஒ-31)



வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து அண்மையில் நடத்திய கலை, கலாசார விழாவின் முதல்நாள் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி மங்கள விளக்கேற்றுவதையும் நிகழ்வில் இடம்பெற்ற சிந்துநடைக்கூத்தையும் படங்களில் காணலாம். முதலாவது படத்தில் உதவிப் பிரதேச செயலர் திருமதி எ.அன்ரன் யோகநாயகம், பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் ஆகியோர் உள்ளனர். (படங்கள்: வலி. தென்மேற்குச் செய்தியாளர்.


ஆசிரியர்களுக்கான மாத இதழ்

அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...


வருட சந்தா ரூ300 மட்டுமே

தொடர்புகளுக்கு
இல 3 டொறிங்ரன் அவனியூ
கொழும்பு - 07
தொலைபேசி - 011 2506272

கல்வி மாற்றங்கள், கல்விச் சீர்திருத்தங்கள் ஏன்? எதற்கு?

வாசியுங்கள் அகவிழி

# வாழ்த்துகின்றோம்



உயர்திரு.

## சின்னத்துரை விக்னராஜா

(சிரேஷ்ட முகாமையாளர், இலங்கை வங்கி மேற்தரக் கிளை, யாழ்ப்பாணம்)

தனது வங்கிச்சேவையின் 40 வருடத்தில் 25 வருட சேவையை வட மாகாணத்திலும் மிகுதி 15 வருட சேவையை வெளிமாவட்டங்களிலும் ஆற்றி இன்று (08.10.2005) சனிக்கிழமை ஓய்வுபெறுகின்ற சின்னத்துரை விக்னராஜா அவர்கள் தன் ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புடனும் வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-

ஆல் சிலோன் டிஸ்ரி பியூட்டர்ஸ்,
212, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 5542

(C45493)(52-16-18)

# IMMEDIATE VACANCY

**solidar**
An INGO consortium including NPA, SAH and ASB

Solidar is a consortium of organizations of 12 European countries that supports a broad portfolio of projects. The Solidar network in Sri Lanka comprises of three international NGOs-Arbiter Samariter Bund (ASB), Norwegian People's Aid (NPA) and Swiss Labour Assistance (SAH)

We are currently at the planning stage for the phase 3 Tsunami Shelter construction project and the following vacancies are to be filled in immediately. All positions are based in Kilinochchi/Paranthan.

Interested candidates MUST posses the minimum requirements stated below. Please send in your applications to reach us on or before 11th October 2005

**Position: Head of Administration**
At least 2 years of experience in a similar role which should include the following: Staff management and office organization, management of relevant database systems, Good command of written and spoken English would be essential. Working knowledge on Word, Excel, PowerPoint and Access is a requirement .

**Position: Administrative Officer**
Provide administative support to the head of Administration Duties will include maintenance of filing system, preparation of travelpasses, arranging accommodation for guests. photocopying and other administrative tasks. Preference will be given to those with experience in a similar field.

**Position : Accountant**
Excellent knowledge in maintaining company accounts with at least 3-5 years experience. Must be able to work in MS Excel and Ms Access. Fluency in written and spoken English is a must.

**Position : Translators** (2 Positions)
Should be capable of both verbal and written translations from Tamil to English and vis versa. Ability to translate Sinhalese into English will be an added Qualification

**Position : Telephone Operator cum receptionist**
Experience in handling a PABX system would be an advantage though not essential. Good command of spoken English is a must.

Norwegian People's Aid | ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. | Swiss Labour Assistance SAH

# தேவை

**திருநெல்வேலியில் அமைந்துள்ள எமது வியாபார நிலையத்திற்கு**

1. சிறு பொதியிடல் செய்பவர்
2. விற்பனை உதவியாளர்
3. கணனி மற்றும் கணக்கியல் அனுபவம் உடையோர்
4. வாகன விநியோக விற்பனையாளர்


என்பவற்றுக்கான வெற்றிடங்கள் உள்ளன. மேற்கூறிய விடயங்களுக்கு பொருத்தமானவர்களும் பழகவிரும்புபவர்களும் 10.10.2005ஆம் திகதிக்கு முன்னர் நேரில் சமுகமளிக்கவும். (ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

* திருநெல்வேலியை அண்டியவர்களுக்கும்
* சாரதி அனுமதிப்பத்திரம்

என்பனவற்றை உடையோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

**MUSIC WORLD**
The Name of Musical & Movies
Palaly Road, Post Box Junction, Thirunelvely, Jaffna.
T.P.: 021 222 6554, Fax: 021 222 3123

# வாழ்த்துகின்றோம்



இலங்கை வங்கி யாழ். மேற்தரக் கிளையிலிருந்து
இன்று (08.10.2005)சனிக்கிழமை ஓய்வு பெறுகின்றார்

கனிவு கொண்டு துன்பம் களைந்திட
துணிவு கொண்டு தீர்மானம் எடுத்திட
துரித சேவை வாடிக்கையாளர் பெற்றிட
உரிய நடவடிக்கை எடுத்திட்ட ஏந்தலே
சீரிய தங்கள் பணிக்கின்று பிரியாவிடை – வாழ்வினில்
எதிர்வரும் நாள்களை இன்பமாய் கழித்திட
தொடர்ந்து தாங்கள் பல்லாண்டு சிறப்புடன்
வாழ்ந்து நலமுடனிருக்க நன் நாளிதனில்
வசந்த கால அந்த நினைவுகள் சுமந்து – மனதார
வாழ்த்துகின்றோம் வாழிய வாழிய வாழிய பல்லாண்டென...

உயர்திரு.

## சின்னத்துரை விக்னராஜா

(சிரேஷ்ட முகாமையாளர்)

இலங்கை வங்கி,
யாழ். மேற்தரக் கிளை.

ஊழியர்கள்.

(C/45403)(52-16-18)

புதிய சாறிவகைகள்
ஸ்கேட் அன் பிளவுஸ்
புதிய ரகம் கண்ணைக்கவரும்
புத்தம் புதிய டிசைன்கள்

* பொக்ஸ் சேட்
* டெனிம்
* விதம்விதமான சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகள் அனைத்துமே வியத்தகு மலிவுவிலையில் கிடைக்கும்.

மலிவு விலைதானா என்பதை அறிந்து கொள்ளவும் நாளைய நாகரீகத்தை முதன்முதலில் இன்றே அறிமுகம் செய்தவர்களா என்பதைப் பார்வையிடவும் ஒருமுறை விஜயம் செய்துபாருங்கள்

# கிறீன் பலஸ் எம்போறியம்

இன்றே வாருங்கள்!

யாழ்நகரில் குறைந்த விலையில் நிறைந்த ரகங்கள்! நிகரில்லாத் தரங்கள்! அழகிய புடைவைத்தினுசுகளின் குளிரூட்டப்பட்ட சாம்ராஜ்யம்.

**பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.**



(C/45494)(52-16-18)

# இம்முறை பருவமழை பொய்த்த காரணத்தால் நெற்செய்கையைக் கைவிடும் அவலநிலை

## பூநகரிப் பிரதேச விவசாயிகள் கவலை

பரந்தரன்,ஒக்.8

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரம்பரிய விவசாயப் பிரதேசமான பூநகரிப் பகுதியில் இம்முறை உரிய காலத்தில் பருவமழை பெய்யவில்லை. இதனால், பெரும்போக நெற்செய்கையைக் கைவிடவேண்டிய அவல நிலையை இப்பகுதி விவசாயிகள் எதிர் நோக்குகின்றனர்.

வழக்கமாக செப்ரெம்பர் மாதத்தில் பெய் யும் பருவமழையைப் பயன்படுத்தி நெற் செய்கை மேற்கொள்ளப்படும். ஆனால், இம் முறை மழை பெய்யாத காரணத்தால் நெல் விதைப்பை மேற்கொள்ள விவசாயிகளால் முடியவில்லை.

பாரம்பரியமான முறையில் பழைமை வாய்ந்த நெல் இனங்கள் பூநகரிப் பகுதியில் மானாவாரியாக விளைவிக்கப்படுகின்றன. சுமார் நான்கு மாத கால நெல் இனங்களைப் பயிரிடும் விவசாயிகள் மழை இல்லாததால் செய்வது அறியாது கவலை அடைந்துள்ள னர்.

பூநகரிப் பிரதேசத்தில் காலபோக பயிர்ச் செய்கைக்கான கூட்டங்கள் நடைபெற்றுள்ள போதும் நெல்விதைப்பை மேற்கொள்ள முடியவில்லை என விவசாயிகள் கூறுகின் றனர்.

இத்தகவலைப் பூநகரி கமநல சேவை நிலைய உத்தியோகத்தர் என்.சுந்தரமூர்த்தி தெரிவித்தார். (ஒ-352)

## கற்குவியலால் விபத்து; ஒருவர் படுகாயம்!

வட்டக்கச்சி, ஒக்.8

கிளிநொச்சி - வட்டக்கச்சி பிரதான வீதி யோரமிருந்த கற்குவியலில் மோட்டார் சைக்கிள் ஏறிச் சறுக்கியதால் ஏற்பட்ட விபத் தில் அதனைச் செலுத்திச் சென்றவர் வீழ்ந்து படுகாயமடைந்தார்.

கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்ற இந்த விபத்தில் கிளிநொச்சி ஆனந்தபுரத்தைச் சேர்ந்தவரான சிவலிங்கம் சுதர்சன் என்ப வரே பாதிப்படைந்தார்.

இவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட் டார். (ஒ-405)

## திருவையாறில் விதை உற்பத்தி

பரந்தரன், ஒக்.8

கிளிநொச்சி, திருவையாறில் உணவு விவசாய நிறுவனத்தின் நிதி உதவியுடன் விதை பொருள் உற்பத்தி ஆரம்பிக்கப்பட் டது. இத்திட்டத்தின் கீழ் 25 விவசாயிக ளுக்கு உள்ளீடுகள், உரவகைகள் ஆகியவை வழங்கப்பட்டன.

இதற்கான ஆரம்ப நிகழ்வு கடந்த மாதம் கமக்கார அமைப்புத் தலைவர் சு.கணபதிப் பிள்ளை தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் விவசாயத் திணைக்களப் பாட விதான அலுவலர் சௌந்தரராசன், போதனா சிரியர் பிரபாகரன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திட்ட அலுவலர் மு. கந்தசாமி, பிரதேச இணைப்பாளர் ச. லொயிட் ஆகியோர் கருத்துரைகளை வழங் கினர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள விவ சாய உற்பத்தியாளர்களுக்குத் தேவையான விதைபொருள்களை மேட்டுநிலச் செய்கை மூலம் பெறுவதே இத்திட்டத்தின் நோக்க மாகும். (ஒ-352)

# கடற்புலித் துணைப்படைப் பயிற்சி நிறைவு


வெள்ளாங்குளம்,ஒக்.8

லெப்டினன்ட் கேணல் நாவரசன் பயிற் சிப் பாசறையில் கடற்புலிகளின் துணைப் படைப் பயிற்சி நிறைவுவிழா கடந்த 4ஆம் திகதி பயிற்சிப் பாசறை மைதானத்தில் இடம் பெற்றது.

விழாவில் பொதுச்சுடரினை மன்னார் மாவட்டக் கடற்புலிகளின் தளபதி செந்தா ளன் ஏற்றிவைத்தார். தேசியக் கொடியினைக் கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரும் மன் னார் மாவட்டப் பயிற்சி ஒருங்கிணைப்பாள ருமான எழில்கண்ணன் ஏற்றிவைத்தார். ஈகச் சுடரினை மன்னார் மாவட்டக் கடற் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழன் ஏற்றினார்.

லெப்டினன்ட் கேணல் நாவரசனின் திரு வுருவப்படத்திற்கு மலர்மாலையை இணை சமாசங்களின் மேலாளர் மேகன் அணிவித் தார்.

கிருஷ்ணர் ஆலயப் பொருளாளர் இ. குபேந்திரன் தலைமையில் அரங்க நிகழ்வு கள் இடம்பெற்றன. இதில் ஆசியுரை தமிழீழ கடற்புலிகளின் தளபதிகளில் ஒரு வரான விநாயகம் ஆற்றினார். நிகழ்வின் சிறப்பு விருந்தினராகச் சிறப்புத் தளபதி சூசை கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினார். இப்பயிற்சிப் பாசறையில் களநிகழ்வுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்ற வீரர் களுக் கான பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஒ-415)



லெப்டினன்ட் கேணல் நாவரசன் பயிற்சிப் பாசறையில் இடம்பெற்ற துணைப் படைக்கான பயிற்சியின்போது எடுக்கப்பட்ட படம் (படம் :- வெள்ளாங்குளம் செய்தியாளர்)

# மாங்குளத்தில் மருத்துவ சேவை

ஒட்டுசுட்டான், ஒக்.8

தியாகதீபம் திலீபனின் 18ஆவது நினைவு நாளையொட்டி மாங்குளம் பெரியகுளம் பகுதியில் திலீபன் மருத்துவமனையினரால் மருத்துவசேவை நடத்தப்பட்டது. இந்தச் சேவை யின் ஆரம்ப நிகழ்வு திலீபன் அபிவிருத்திக் குழுத் தலைவர் பரமேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பொதுச்சுடரினை திலீபன் மருத்துவமனை ஆலோசகர் மருத்துவ கலாநிதி எழில் மதியும் தேசியக் கொடியை சிறப்பு மருத்துவப்போராளி வண்ணனும் ஈகச் சுடரை மாவீரர் நகுலனின் தாயார் சரஸ்வதி,பெரியகுளம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை அதிபர் வேகா வனம் நித்தியகலா ஆகியோரும் ஏற்றினர்.




ஆசியுரையை வேகாவனம் நித் திய கலாவும் சிறப்புரைகளை மாங் குளம் அரசியல்துறைப் பொறுப் பாளர் நாகமைந்தன், திலீபன் மருத் துவசேவை ஆலோசகர் எழில்மதி கரிகாலன் ஆகியோர் நிகழ்த்தினர். (ஒ-341)

# வட்டக்கச்சியில் எழுச்சியுடன் நடந்த பன்னிருவேங்கைகளின் நினைவு நிகழ்வு

வட்டக்கச்சி,ஒக்.8

தளபதிகள் குமரப்பா மற்றும் புலேந்தி ரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் 18 ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் கடந்த 5ஆம் திகதி வட்டக்கச்சியில் உணர்வு பூர்வ மாக நடைபெற்றது.

அன்று முற்பகல் 10 மணியளவில் வட் டக்கட்சி மாவீரர் மண்டபத்தில் தேசியக் கொடி யேற்றலுடன் பன்னிரு வேங்கைக ளின் திருவுருவப்படங்களுக்கான ஈகச் சுட ரேற்றல், மலரஞ்சலி ஆகியவை இடம்பெற்றன.

கிளிநொச்சி மாவட்டத்துக்கான பிரதான நினைவு நிகழ்வு இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை மைதானத்தில் நடை பெற்றது. பிற்பகல் 4.30 மணியளவில் பன் னிரு வேங்கைகளின் திருவுருவப்படங்கள் தருமபுரம் ம.வி. மாணவர்களின் 'பான்ட்' வாத்திய அணிவகுப்புடன் எடுத்துவரப் பட்டு நிகழ்வு நடைபெறும் மேடையருகே அமைக்கப்பட்ட விசேட பந்தலில் வைக்கப் பட்டன.

அங்கு பொதுச்சுடரினை இராமநாதபுரம் வலய அரசியல்துறைப் பொறுப்பாளர் கதி ரொளியும் தேசியக் கொடியை வட்டக்கச்சி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சுட ரும் ஏற்றினர். தொடர்ந்து பன்னிரு வேங் கைகளின் திருவுருவப்படங்களுக்கு ஈகச் சுடரேற்றப்பட்டது.

தொடர்ந்து மேடை நிகழ்வுகள் இராம நாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்கலவன் பா டசாலை அதிபர் ச.புண்ணியமூர்த்தி தலை மையில் நடைபெற்றன. இதில் பாடசாலை மாணவர்களது கலை நிகழ்வுகளும் சிறப்பு நிகழ்வாக தமிழீழ மகளிர் இசைக் குழுவின ரின் இசைநிகழ்வும் இடம்பெற்றன.

சிறப்புரைகளை இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை ஆசிரியர் தே.நிகேதரன், வானதி வெளியீட்டகத்தைச் சேர்ந்த தமிழ வள் ஆகியோர் நிகழ்த்தினர். இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொ றுப்பாளர் சிவநாத், கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பசு பதி ஆகியோர் உட்படப் போராளிகள், பொது மக்கள் எனப் பலரும் பங்குபற்றினர்.(ஒ-405)

# கிளிநொச்சியில் திருக்குறள் மாநாடு அடுத்த மாதம் நடைபெற ஏற்பாடு

பரந்தன்,ஒக்.8

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தி னால் ஆண்டுதோறும் கொண்டாடப்படும். திருக்குறள் மாநாடு அடுத்த மாதம் 3ஆம், 4 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. இம் மாநாடு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத் தில் நடைபெறும்.

மாநாட்டின் முதல்நாள் நிகழ்வில் திருக் குறள் ஆய்வரங்கும் இரண்டாம் நாள் நிகழ் வில் பண்பாட்டு ஊர்வலம், சான்றோர் கௌர விப்பு, பரிசளிப்பு ஆகியவையும் நடைபெற வுள்ளன.

ஆய்வரங்க நிகழ்வில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், அறிஞர்கள் கலந்து கொள்ள ஏற்பாடு மேற்கொள்ளப்படுகிறது.

இந்த ஆய்வரங்கில் பங்குபற்ற விரும்பு பவர்கள், தங்கள் பெயர்களை முற்கூட்டியே, தமிழ்ச் சங்கத்தில் பதிவுசெய்துகொள்ளும் படி தமிழ்ச் சங்கத் தலைவர் வே.பரமநாத பிள்ளை கேட்டுள்ளார். திருக்குறள் மாநாடு சிறப்புற நடைபெற அனைவரும் ஒத்து ழைப்பு வழங்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ-325)

# புதர் மண்டிய காணிகளால் விஷஜந்துகள் பெருக்கம்

ஒட்டுசுட்டான்,ஒக்.8

மீள்குடியமர்வு இடம்பெற்றுவரும் ஒட்டு சுட்டான் பிரதேசத்தில் குடியிருப்புகளின் மத்தியில் உள்ள காணிகள் சில துப்புரவு செய் யப்படாது புதர்மண்டி உள்ளன. இதனால் அப் பகுதிகளில் பாம்புகள் உட்பட விஷஜந்து களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகப் பொது மக்கள் கூறுகின்றனர்.

மிதிவெடிகள் அகற்றப்படாமை, காணி உரிமையாளர்களுக்கு வேறு இடங்களில் காணி கள் வழங்கப்பட்டமை என்பன உட்படப் பல்வேறு காரணங்களால் காணிகள் துப்பு ரவு செய்யப்படாமல் உள்ளன.

பாடசாலை, மருத்துவமனை, மக்கள் வாழ் விடங்கள் போன்றவற்றின் அருகேயுள்ள காணிகள் புதர் மண்டிக்கிடப்பதால் விஷ ஜந்துக்கள் தீண்டும் ஆபத்தை பொதுமக்கள் எதிர்நோக்குகின்றனர்.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அக்கறைகாட்டவேண்டும் என்றும் அவர் கள் கோருகின்றனர். (ஒ-341)

கிளிநொச்சி தட்டு வன்கொட்டி கிராமத்தில் உள்ள பாடசாலைக் கட் டடம் இது. இந்தக் கிரா மத்தில் சுமார் 110 குடும் பங்கள் மீள்குடியமர்ந் துள்ளன. இங்கு வாழும் மக்கள் மேற்கொண்ட முயற்சியால் சுமார் ஒரு லட்சத்து 75ஆயிரம் ரூபா செலவில் இந்தப் பாட சாலைக் கட்டடம் அமைக் கப்பட்டது. ஆனால்,



ஆசிரியர் இல்லாத காரணத்தால் இப்பாடசாலையின் கற்பித்தல் செயற்பாடு முடங்கிப் போயுள்ளது. தட்டுவன்கொட்டி கிராம அபிவிருத்திச் சங்கம் சம்பந் தப்பட்ட அதிகாரிகளிடம் இந்தப் பாடசாலைக்குப் போதுமான எண்ணிக்கையில் ஆசிரியர்களை நியமிக்கும்படி நீண்டகாலமாகக் கோரிக்கை விடுத்துவருகிறது.

*(படம்: பரந்தன் செய்தியாளர்)*

# மாந்தை மேற்குப் பிரதேச சபைக்கென இலுப்பைக்கடவையில் அலுவலகம் திறக்குக!

## அப்பகுதிப் பொதுமக்கள் கோரிக்கை

வெள்ளாங்குளம், ஒக்.8

மாந்தை மேற்கு பிரதேசசபையின் இலுப் பைக்கடவை உப அலுவலகத்தைச் செயற் படுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

இந்தப் பிரதேச சபைக்கு உட்பட்ட தேவன் பிட்டி, வெள்ளாங்குளம், பாவியாறு, மூன் றாம்பிட்டி, இலுப்பக்கடவை, அந்தோனி யார்புரம், கள்ளியடி, ஆத்திமோட்டை போன்ற இடங்களைச் சேர்ந்த பொது மக்கள் பிரதேச செயலகத்தின் உப அலுவலகம் இலுப்பைக் கடவையில் திறக்கப்பட்டால் பயனடைவார் கள். இவர்கள் தற்போது சுமார் 40 கிலோ மீற்றர்கள் வரை பயணித்து அடம்பன் அலு வலகத்துக்குச் சென்றே பிரதேச சபையின் சேவைகளைப் பெறவேண்டியுள்ளது.

அடம்பன் அலுவலகத்தில் உரிய அதி காரி அல்லது ஊழியர் இல்லாவிட்டால், பொதுமக்களுக்குப் பணம் மற்றும் கால விர யம் ஏற்படுகிறது.

இலுப்பைக்கடவை அலுவலகத்தை இயக் கும் மாந்தை மேற்குப் பிரதேச சபையி டம் பொதுமக்கள் நீண்டகாலமாகக் கோரி வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.(ஒ-415)

ஓம்
ஸ்ரீ ராம ஜெயம்



வண்ணை
## ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
யாழ்ப்பாணம்

# சுமங்கலி தீப பூஜை

செந்தாமரையாளே செல்வங்கள் அத்தனையும்
தந்தாள வல்ல தயாதேவி - எம் தாயாய்
இன்பமே நல்கும் இலக்குமியே - எங்கட் (கு) - உன்
மன்னருளை என்றும் வழங்கு.

நிகழும் மங்களகரமான பார்த்திப வருஷம் புரட்டாதித் திங்கள் 31 ஆம் நாள் திங்கட்கிழமை 17 -10-2005 காலை 8.30 மணி முதல் ஸ்ரீ மஹாலக்ஷ்மி அம்பாளுக்கு விஷேட அபிஷேகமும், தீபாராதனைகளும் நடைபெறும். பிற்பகல் 3.00 மணிக்கு சுமங்கலி தீப பூஜை நடைபெற்று ஸ்ரீ மஹாலக்ஷ்மி அம்பாள் கமலாசனத்தில் உள்வீதி வலம்வருவார்.

இச்சுமங்கலி பூஜை உற்சவத்தில் அடியார்கள் யாவரும் பங்குபற்றி அம்பாளின் அருட்பிரசாதத்தைப் பெற்று, ஸ்ரீ வேங்கடவன் திருவருளால் லக்ஷ்மி விலாச சம்பன்னராக வாழ்வீர்களாக!!

குறிப்பு
சுமங்கலி தீப பூஜையில் பங்குபற்ற விரும்பும் மகளிர் 01.10.2005 தொடக்கம் அதற்குரிய சீட்டுகளை தேவஸ்தான அலுவலகத்தில் ரூபா 200/- செலுத்திப்பெற்று, இருக்கை இலக்கங்களை உறுதிப்படுத்திக் கொள்க.

இருக்கைகளின் எண்ணிக்கை 300 மட்டுமே.

ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்,
யாழ்ப்பாணம்.
ஆதீனமகாசபை.

(சி-45492)(21.15.17)


### வீட்டினுள் நுழைந்து பெண்ணைக் கடித்த கீரி இறந்தது!

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் உள்ள வீடொன்றின் சமயலறைக்குள் திடீர் என நுழைந்த கீரி அங்கு சமைத்துக் கொண்டிருந்த பெண்ணைக் கடித்தது.

இப் பெண்ணைக் கடித்த கீரி சிறிது நேரத்தில் இறந்து விட்டது.

கீரியினால் கடியுண்ட பெண் - சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதுடன் ஏற்புத் தடுப்பூசியையும் போட்டுக் கொண்டார்

தென்மராட்சியில் கீரிகள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-31)

### குளப்புனரமைப்பு பூர்த்தியானது

மணிக்காவில் குளப் புனரமைப்புப் பணி முடிக்கப்பட்டுள்ளது. நவீன இயந்திர சாதனங்களின் உதவியுடன் புனரமைக்கப்பட்ட இக் குளம் இடைக்குறிச்சி கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ளது. உலக உணவுத் திட்டத்தின் கீழ் இக் குளத்தின் புனரமைப்பு வேலையை இடைக் குறிச்சி விவசாய சம்மேளனம் பொறுப்பேற்று நடைமுறைப் படுத்தியதாக மேற்படி சம்மேளனத் தலைவர் க. சுப்பிரமணியக் குருக்கள் தெரிவித்தார். (ஒ-170)


**SLEAS**
கல்வி நிர்வாகசேவை
போட்டிப் பரீட்சை வகுப்புகள்
கிரகித்தல் - பேராசிரியர் அ.சண்முகதாஸ்
கல்வி நிர்வாகம் - S. நல்லையா
முன்னாள் மேல் மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர்
நுண்ணறிவு - அ.குமாரவேல்
ஆரம்பம் : 08-10-2005 பிற்பகல் 2.30. முன் கூட்டிப் பெயரைப் பதிவு செய்யுங்கள் விவரங்கட்கு:-
புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(40921)(21-46-17-15)

**LUXURY HOUSE WITH ALL MODERN FACILITIES AVILABLE FOR RENT**
**N.G.Os ONLY**

An upstairs' house situated at 44/20,Sangiliyan road, Nallur. adjacent to the Nallur Kandasamy temple in 14 lachams of land with all modern facilities including garage is available for rent.
*Please contact telephone numbers:*
*021 222 9055,*
*0773 - 054974,*
*0779-179919.*
(40912)(21-46-15-17)

விசேட கழிவு கட்டணத்தில்
யாழ்-கொழும்பு பிரயாண ஒழுங்குகள்

விமான மூலமாக கட்டணம்
யாழ்-கொழும்பு - 6800/-
யாழ்-கொழும்பு-யாழ் - 11800/-
சொகுசு பஸ் (A/C BUS)
யாழ்-கொழும்பு - 1100/-
VAN மூலமாக
யாழ்-கொழும்பு - 1100/-
VAN மூலமாக செல்பவர்களை வீடுகளில் ஏற்றி கொழும்பிலும் அவர்களது இருப்பிடங்களில் பாதுகாப்பாக இறக்கிவிடப்படுவார்கள்
பிரத்தியேக VAN சேவை
யாழ்-கொழும்பு - 12000/- மட்டும்
* சர்வதேச நாடுகளுக்கான விமான ரிக்கற்றுக்கள் கொழும்பை விட குறைந்த கட்டணத்தில்
* தீபாவளியை முன்னிட்டு உலகநாடுகளுக்கான (PARCEL SERVICE) பொதிகள் சேவை இரண்டு கிலோவிற்கு மேல் அனுப்பும் போது மிகவும் குறைந்த கட்டணத்தில் நாமே பொதிகள் செய்து அனுப்பி வைக்கிறோம்.
(C/45478)
தொடர்புகளுக்கு:
**RAINBOW TRAVELS & TOURS**
32 1/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ராஜா கிறீம் ஹவுஸ் அருகில்)
தொ.இல: 0777 328219, 021 222 3237


# மரண அறிவித்தல்

## கதிரவேலு சுபத்திரை (ஐயம்பிள்ளை)



கம்மாலையடி, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு சுபத்திரை நேற்று முன்தினம் (06.10.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலுவின் அன்பு மனைவியும் அருமைத்துரை, அருள்நேசராணி, இராசகிளி (சுவிஸ்), அரசநாதன், குணபால், குணசீலன் (பிரான்ஸ்), குணராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நேசம்மா மற்றும் பவானி (சுவிஸ்), லீலாவதி, ஜெயராணி, நந்தினி (பிரான்ஸ்), ஜெயலக்சுமி (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான இராஜலக்சுமி, தெய்வானை மற்றும் மகேஸ்வரி, புஸ்பராணி, பூபதி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09-10-2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

கம்மாலையடி,
சண்டிலிப்பாய் மத்தி.

(4 015)(46-

# தேசிய மட்டத்திலான போட்டிகளில் வடக்கு - கிழக்குக்கு 6 பதக்கங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.8

கொழும்பில் கடந்த வாரம் நடந்த பாட சாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டிகளில் வடக்கு - கிழக்குக்கு ஆறு பதக்கங்கள் கிடைத்துள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்தில் வவுனியாவில் நடந்த போட்டிகளில் வெற்றி பெற்றுத் தேசிய மட்டத்துக்குத் தெரிவான வர்கள் இறுதிப் போட்டிகளில் கலந்து கொண்டனர்.

கொழும்பில் கடந்தவாரம் நடைபெற்று ஞாயிற்றுக்கிழமை முடிவடைந்த இந்தப் போட்டியில் வடக்கு - கிழக்கில் இருந்து பங்குபற்றியவர்களில் அறுவர் பதக்கங்க ளைப் பெற்றுள்ளனர்.

ஒருவர் தங்கப்பதக்கத்தையும் நால்வர் வெள்ளிப்பதக்கங்களையும் ஒருவர் வெண் கலப் பதக்கத்தையும் தட்டிக் கொண்டனர்.

பதக்கம் பெற்றோர் விவரம் வருமாறு:-

✱ தியாகராசா தர்சன் - சென்.ஜோன்ஸ் கல்லூரி- 17 வயதுப்பிரிவு - 110 மீற்றர் தடை தாண்டி ஓட்டம், இரண்டாம் இடம் - வெள்ளிப்பதக்கம் - இவர் 15 செக்கனில் ஓடி முடித்துப் பதக்கம் பெற்றார்.

✱ அருளானந்தம் சுஜிதா - சுண்டுக் குழி மகளிர் கல்லூரி - 17 வயதுப் பிரிவு - உயரம் பாய்தல் - 3 ஆம் இடம் - வெண் கலப்பதக்கம் - 1.51 மீற்றர் உயரம் பாய்ந்து பதக்கம் பெற்றார்.

✱ எம்.சி.எம்.றிஸ்வி - கிண்ணியா மத் திய கல்லூரி- 17 வயதுப் பிரிவு - ஈட்டி எறி தல் - இரண்டாமிடம் - வெள்ளிப்பதக்கம்.

✱ கே.ரி.எம்.ஹாரீஸ் - திருகோணமலை சென்ஜோன்ஸ் கல்லூரி- 19 வயதுப் பிரிவு - 400 மீற்றர் ஓட்டம் - இரண்டாமிடம் - வெள்ளிப்பதக்கம் - இவர் 49.47 செக்கனில் ஓடி முடித்துப் பதக்கம் பெற்றார்.

✱ எஸ்.தாரணி - அக்கராயன் ம.வி.- 17 வயதுப்பிரிவு - ஈட்டி எறிதல் - இரண்டாமி டம் - வெள்ளிப்பதக்கம் - இவர் 33.31 மீற் றர் தூரம் ஈட்டியை எறிந்து பதக்கம் பெற் றார்.

✱ எஸ்.நிரஞ்சன் - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி - 21 வயதுப்பிரிவு -400 மீற்றர் ஓட்டம் - முதலாமிடம் - தங்கப்பதக் கம் - இவர் 49.41 செக்கனில் ஓடிமுடித்துப் பதக்கம் பெற்றார். (3-352-203)

## வலி.தெற்கு போட்டி முடிவுகள்

வலி.தெற்கு,ஒக்.8

வலி.தெற்கு பிரதேசசபையினரால் உள்ளூராட்சி வாரத்தையொட்டி அப்பகுதி யில் உள்ள சனசமூக நிலையங்களுக்கிடை யில் நடத்தப்பட்டு வரும் விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட் டுள்ளன.

போட்டி முடிவுகள் வருமாறு:-

**தாச்சிப்போட்டி:**

தாவடி ஸ்ரீ காளியம்பாள் சனசமூக நிலை யம், சுதுமலை வடக்கு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் சனசமூக நிலையம்.

**கரபந்தாட்டம் (செற்அப்)**

மல்லாகம் கோட்டைக்காடு சைவ வாலி பர் சனசமூக நிலையம், இணுவில் கிழக்கு சிவாகாமசுந்தரி சனசமூக நிலையம்.

**கரபந்தாட்டம் (ஓவர் கேம்)**

மல்லாகம் கோட்டைக்காடு சைவ வாலி பர் சனசமூக நிலையம், சுன்னாகம் காந்த ரூபன் சனசமூக நிலையம். (3-152)

# இளையோர் நிறுவனம் நடத்திய இறுதியாட்டங்களில் வென்றோர்

கிளிநொச்சி, ஒக்.8

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி இளையோர் செயற்பாட்டு நிறுவனம் நடத்திய அரும்புகள் உதைபந் தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட் டத்தில் 13 வயதுப் பிரிவில் உருத்திரபுரம் ம.வி.அணியும் காந்தரூபன் அறிவுச்சோலை அணியும் இணைச் சம்பியன்களாகின.

இந்தப் போட்டியில் 13 வயதுப் பிரி வில் அரும்புகள் அணி, உருத்திரபுரம் ம.வி. அணி, காந்தரூபன் அணி ஆகியனவும் -

15 வயதுப் பிரிவில் அரும்புகள் அணி, உருத்திரபுரம் ம.வி. அணி, வட்டக்கச்சி ம.வி.அணி, பளை மத்தியகல்லூரி அணி, காந்தரூபன் அறிவுச்சோலை அணி ஆகி யனவும் மோதிக்கொண்டன.

13 வயதினருக்கிடையே நடந்த இறுதி யாட்டத்தில் உருத்திரபுரம் ம.வி., காந்தரூபன் அறிவுச்சோலை அணி ஆகியன மோதின.

இரண்டு அணிகளும் தலா ஒரு கோல் போட்டன. போட்டி முடிவில் இரு அணி களும் இணைச்சம்பியனாகத் தெரிவு செய் யப்பட்டன.


15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையே நடைபெற்ற இறுதி ஆட் டத்தில் வட்டக்கச்சி ம.வி.அணியும், காந்தரூபன் அறிவுச் சோலை அணியும் மோதிக்கொண்டன.

இதில் இரு அணிகளும் கோல் எதுவும் போடாமையால் இரு அணிகளும் சம்பிய னாகத் தெரிவு செய்யப்பட்டன.

இறுதியில் அரும்புகள் தற்காப்பு பயிற்சி மாணவர்களின் கராத்தே கண்காட்சி நடை பெற்றது.

தொடர்ந்து உதைபந்தாட்டத்தில் வெற்றி பெற்ற அணிகளுக்கு வெற்றிக்கிண்ணங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் கொழும்பில் நடைபெறவுள்ள கரத்தே போட்டியில் பங்குபற்றவுள்ள மாணவர்களுக்கும் வெற்றிக்கேடயங்கள் வழங்கப்பட்டன. (3-203)



அரும்புகள் ச... ...யர்கள் நிகழ்த்திய கராத்தே கண்காட்சி...

## பருத்தித்துறை மறைக்கோட்ட விளையாட்டுப்போட்டி

தென்மராட்சி,ஒக்.8

பருத்தித்துறை கத்தோலிக்கமறைக் கோட்டப் பங்குகளைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் பருத்தித்துறையில் இடம்பெற் றன.

இப்போட்டிகளில் சாவகச்சேரி, தாளை யடி, மிருசுவில், அச்சுவேலி, பருத்தித்துறை, கரவெட்டி, உடுப்பிட்டி ஆகிய பங்குகளைச் சேர்ந்த அணிகள் கலந்து கொண்டன.

தாச்சிப்போட்டியில் சாவகச்சேரி பங் கைச் சேர்ந்த புனித விகோரியார் அணியின ரும் கரபந்தாட்டப் போட்டியில் தாளையடி பங்கைச் சேர்ந்த கட்டைக்காடு கப்பலேந்தி மாதா அணியினரும் - முதலிடத்தினைப் பெற்றனர். (ஒ117)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.8

யாழ்ப்பாணம் கல்விக் கோட்டப் பாட சாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிக ளின் விவரம் வருமாறு:

**14 வயதுப் பிரிவு ஏ**

✱ புனித ஜேம்ஸ் ம.வி. எதிர் புனித சாள்ஸ் ம.வி.

✱ நாவாந்துறை றோ.க.வி.எதிர் புனித யோசப் வித்தியாலயம்.

✱ புனித ஜேம்ஸ் ம.வி.எதிர் யாழ். மத்திய கல்லூரி.

✱ புனித சாள்ஸ் ம.வி.எதிர் யாழ்.மத்திய கல்லூரி. (3-190)

விளையாட்டு

# புத்தூர் உதைபந்தாட்டம் யங்ஹென்றீஸ் சம்பியன்

யாழ்ப்பாணம்,ஒக்.6

புத்தூர் எல்லாளன் விளையாட்டுக் கழ கம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் கடந்த வாரம் எல்லா ளன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றன. இவ் இறுதியாட்டத்தில் இள வாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழகமும், கரணவாய் மத்திய விளையாட் டுக் கழகமும் மோதின.

தொடக்கம் முதல் மிக விறுவிறுப்பாக இவ்வாட்டத்தின் இடைவேளை வரை இரு அணியினரும் கோல் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் இடைவேளைக்கு நிறுத் தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்ப மானபோது இரு அணிவீரர்களும் புதிய உத்வேகத்துடன் விளையாடினர். இந்நிலை யில் பிற்பாதி ஆட்டம் ஆரம்பமாகி 10 ஆவது நிமிடத்தில் யங்ஹென்றீஸ் அணி வீரர் ரஜீவ் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை தக்கமுறையில் பயன்படுத்தி தமது அணிக் கான முதல் கோலைப் பெற்றுக்கொடுத்தார். இதன் பின்னர் ஆட்டம் முடிவடைவதற்கு 5 நிமிடங்கள் இருக்கும் போது யங்ஹென்றீஸ் அணிவீரர் சுரேஸ் தமது அணிக்காக இரண் டாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார். கரணவாய் மத்திய விளையாட்டுக் கழக வீரர்கள் கோல் பெறுவதற்கு பல முயற்சி களை மேற்கொண்டபோது அது பயன் தர வில்லை. இந்தநிலையில் 2-0 என்ற கோல் அடிப்படையில் கரணவாய் மத்திய விளை யாட்டுக் கழகத்தைத் தோற்கடித்து யங்ஹென் றீஸ் விளையாட்டுக் கழகம். சம்பியன் கிண் ணத்தை தனதாக்கிக் கொண்டது.

இப் போட்டித் தொடரின் தொடர் ஆட்ட நாயகனாக யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழக வீரர் எஸ்.சதீஸும் சிறந்த கோல்காப் பாளராக கரணவாய் மத்திய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.பானுருபனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இவ் இறுதியாட்டத்திற்கு முன்னர் நடை பெற்ற காட்சி உதைபந்தாட்டப் போட்டியில் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக்கழகம் அதனை எதிர்த்து விளையாடிய புத்தூர் எல்லாளன் விளையாட்டுக் கழகத்தை 2-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

இச்சுற்றுப் போட்டியில் மூன்றாமிடத்தை கர வெட்டி நவசக்தி விளையாட்டுக்கழகம் பெற்றது.

இதில் முதலாமிடத்தைப் பெற்ற யங் ஹென்றீஸ் அணிக்கு 10 ஆயிரம் ரூபாவும், [illegible]டத்தைப் பெற்ற அணிக்கு 7 [illegible] மூன்றாமிடத்தைப் பெற்ற [illegible] வழங்க[illegible]ன. (3-410-190)

## தென்மராட்சி வலய உதைபந்தாட்டம்:

# சாவகச்சேரி இந்துவும் வீரசிங்கமும் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன

தென்மராட்சி,ஒக்.8

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை களின் 12வயதுப் பிரிவினருக்கு இடையே நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி அணியும் மீசாலை வீரசிங் கம் மகாவித்தியாலய அணியும் மோத வுள்ளன.

இச்சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் விரைவில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, 14 வயதுப்பிரிவு, 16 வயதுப் பிரிவு, 18 வயதுப்பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளின் அரையிறுதியாட்டங்களும் நடைபெற்று வருகின்றன. (3-117-203)

## அரியாலைக் கழகம் வெற்றி பெற்றது

யாழ்ப்பாணம்,ஒக்.8

அரியாலை கரபந்தாட்ட ரசிகர்களின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் மின் ஒளி யிலான கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

இந்த ஆட்டத்தில் அச்சுவேலி விக்கினேஸ் வரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் மோதியது.

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விளையாடிய அச்சுவேலி விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழக அணியை 3:1 என்ற செற்கணக்கில் 22:25, 25:10, 25:23, 25:20 என்ற புள்ளி அடிப்ப டையில் வெற்றிகொண்டது. (3-190)

## கோப்பாய் கோட்ட உதைபந்தாட்டம்: அரையிறுதிக்குத் தகுதிபெற்ற அணிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.8

கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கு இடையில் இடம்பெற்ற 14 வயதுப் பிரிவி னருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி யின் அரை இறுதியாட்டங்களில் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆகியன வெற்றி பெற் றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் அச் செழு சைவப்பிரகாச வித்தியாலய அணியை எதிர்த்து உரும்பிராய் இந்துக் கல்லூரி அணி மோதியது.

அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது அரை இறுதிப் போட்டி யில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணியை எதிர்த்து ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலய அணி மோதி யது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (3-190)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி
**மணிவண்ணன் சுஜீபா**

*சித்த ஆயுள்வேதக் கல்லூரி மாணவி இணுவை யூர் மணிவண்ணன் சுஜீபா அவர்கள் யாழ்.பல் கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் B.A. பட்டம் பெற்றதனையிட்டு மகிழ்வுற்று வாழ்த்து வோர்கள்*

பி.மணிமொழி, ந.மணிவேந்தன்,
ந.மணிகரன், ந.மணிவதனி.

*கஸ்தூரியார் லேன்,*
*யாழ்ப்பாணம்.* (40998)(42-15-18)



## மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்

06-10-2005 யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற
எமது சக ஆசிரியர்களான

*திரு.குமாரு சுதாகரன் (வரலாறு)*
*திரு.நல்லதம்பி பாபு (புவியியல்)*
*திரு.ஜெயக்குமார் (இந்து நாகரீகம்)*

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்தி மென்மேலும் சிறப்புப் பெற்று வாழ வாழ்த்துவோர்.

*அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்,*
**விக்னா கல்வி நிறுவனம்.**

(40994)(46-15-18-42)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற





**செல்வநாதன் செல்வதுஷ்யந்** — *மருத்துவமாணி* (M.B.B.S)

**வரதராஜா வித்தியாபரன்** — *நுண்கலைமாணி* BFA (Hons)

*ஆகிய இருவரையும் மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.*

சி.சிவதாசன (J.P) குடும்பம், தி.சிவானந்தன் குடும்பம்,
ஐ.முருகதாசன் குடும்பம்,
ஐ.குமரதாசன் குடும்பம்.

**அரியாலை.**
(41005)(32-15-18-42)



**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**
## திருகோணமலை வளாகம்

*வெளிவாரி பட்டதாரி/ புற நிலைச்சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள்*

- கலைமாணிப் பட்டம் -தொடர்பாடல் 2005/2006 (ஆங்கிலமொழி மூலம்)
- விஞ்ஞானமாணிப் பட்டம் - முகாமைத்துவம் 2005/2006 (ஆங்கில மொழி மூலம்)
- ஆங்கிலக் கற்கை நெறிக்கான தகைமைச் சான்றிதழ் 2005/2006

மேற்படி பாடநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களையும் ஏனைய விவரங்களையும் 31.10.2005 ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளலாம்.

சிரேஷ்ட உதவிப்பதிவாளர்,
திருகோணமலை வளாகம்,
315,டொக்கியாட் வீதி,
திருகோணமலை.
தொலைபேசி இலக்கம் : 026 2222769

முடிவு திகதி: *30.11.2005*

*சிரேஷ்ட உதவிப்பதிவாளர்,*
*திருகோணமலை வளாகம்,*
*315, டொக்கியாட் வீதி,*
*திருகோணமலை.*
*05.10.2005*

(சி/45487)(46-18-19-42)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*கடந்த 06.10.2005 அன்று*
*யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற*
*பட்டமளிப்பு விழாவில் சமூகவியலில்*
*சிறப்புப் பட்டம் பெற்ற*

**திருமதி வி.ஷாமினி**

B.A. (Hons)*அவர்களை மனமுவந்து*
*பாராட்டி வாழ்த்துகிறோம்*

*அந்தணரும் அறநெறியும் செழிப்புற்றோங்க*
*செந்தமிழும் சிவநெறியும் சிறப்புற்றோங்க*
*மானுடமும் சமூகவியலும் தழைத்தோங்க*
*கலைமாணிப்பட்டம் பெற்று நீ நீடூழி வாழி*

அப்பா, அம்மா,
தம்பிமார், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

'சிவகமலை',
முதலாம் ஒழுங்கை,
உரும்பிராய் தெற்கு. (40988)(42-18-19)


## கோப்பாய்ப் பிரிவில் மாதாந்தக் கொடுப்பனவு

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான கொடுப்பனவு கடந்த 5ஆம் திகதியிலிருந்து வழங்கப்பட்டு வருவதாகக் கோப்பாய்ப் பிரதேச தபாலதிபர் தெரிவித்தார்.

இந்தக் கொடுப்பனவைப் பெறுபவர்கள் கோப்பாய் அஞ்சல் அலுவலகத்திலும் உப அஞ்சல் அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாமென அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-204)

## சமாதானம் குறித்த பயிலரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.8

கொழும்பு மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பின் அனுசரணையுடன் வட இலங்கை சர்வோதயம் நடத்தும் சமாதானமும் அபிவிருத்திக்குமான செயற்றிட்டப் பயிலரங்கு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு புங்குடுதீவு வட இலங்கை சர்வோதய சேவை வளாகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சமாதானமும் சமூக விழுமியங்களும் என்னும் தலைப்பில் முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.கணபதியும் சமாதானத்தின் பின் சுய தொழில் அபிவிருத்தி என்னும் தலைப்பில் இளவாலை இளஞ்சுடர் இளைஞர் கழக அமைப்பாளர் திருமதி இ.யோகநாதனும் கருத்துரை வழங்குவர். (202)

## கற்பித்தல் சாதனப் போட்டியின் பரிசளிப்பு விழா

கற்றல் கற்பித்தல் தர உள்ளீட்டு மூலவள நிலையம் நடத்தும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் சாதனங்கள் உருவாக்கல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ் கந்தமூர்த்தியும் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை வங்கியின் யாழ்.இரண்டாம் தரக் கிளை முகாமையாளர் கே.சிவராமலிங்கம், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் ஆகியோர் கலந்துகொள்வர்.

நிகழ்வில் 'படி' ஆசிரியர் வாண்மை இதழ் வெளியீடு இடம்பெறும். வெளியீட்டுரையை கல்லூரியின் உப பீடாதிபதி பா.தனபாலன் நிகழ்த்துவார். நோக்கவுரையை கல்லூரியின் கல்வியியலாளர் த.சிவகுமார் நிகழ்த்துவார். (ஓ-202)

## வீதி விபத்தில் மாணவர் காயம்

சாவகச்சேரி,ஒக்.8

சாவகச்சேரி டச்சு வீதி கணேசு கடைச் சந்தியில் கடந்த 4 ஆம் திகதி நண்பகல் இடம்பெற்ற லொறி- மோட்டார் சைக்கிள் விபத்தில் சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த ஆறுமுகம் அரவிந்தன் (வயது 22) என்ற பல்கலைக்கழக மாணவர் தலையில் படுகாயமடைந்தார்.

அவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ஒ-31)

## கணிதம், தமிழ்பாட ஆலோசனைக் கூட்டம்

தென்மராட்சி,ஒக்.8

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் யுனிசெவ் நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்படவுள்ள தரம் 10 வகுப்பு மாணவர்களுக்கான கணிதம், தமிழ் பாட செயல்திட்டம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளைமறுதினம் பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பாடசாலைகளில் தரம் 10 வகுப்புகளில் கணிதம், தமிழ் ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களும் அதிபர்களும் இதில் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் அறிவித்துள்ளார். (ஓ-117)

## ஓமந்தைச் சாவடியில் தவறவிடப்பட்ட பொருள்கள் மீட்பு

தென்மராட்சி,ஒக்.8

கடந்த 27 ஆம் திகதி ஓமந்தை சோதனை நிலையத்தினூடாக பயணித்தவர்களால் தவறவிடப்பட்ட பொருள்கள் சோதனை நிலையத்தில் உள்ளன என்றும் - அவற்றை உரியவர்கள் ஆதாரங்காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-117)


## ஞானக்குழந்தை கல்விக் கழகம்

19, சிவன் வீதி, திருநெல்வேலி

ஆசிரியர் திரு.வே.அன்பழகன் அவர்களின்
தரம் 5புலமைப்பரிசில் வழிகாட்டல்
**வகுப்புகள் ஆரம்பமாகின்றன**

காலம் - 13-10-2005 வியாழக்கிழமை பி.ப.4மணிக்கு.

இடம் - ஞானக்குழந்தை கல்விக்கழகம் 19,சிவன் வீதி, திருநெல்வேலி.

குறிப்பு - மேற்படி வகுப்புகளுக்கான அனுமதிகளை இன்று 08-10-2005 இல் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(41001)(46-18-19-42)

*- நிர்வாகம்.*



## நினைவஞ்சலி

20ஆவது ஆண்டு



செல்வி
கலைச்செல்வி தர்மலிங்கம்
தோற்றம் மறைவு
*01-10-1970 01-07-1985*

6 ஆவது ஆண்டு



திருமதி
மகேஸ்வரி தர்மலிங்கம்
தோற்றம் மறைவு
*08-03-1940 08-10-1999*

உங்கள் பிரிவால் துயருறும்:
**அப்பா - கணவர்,**
*(சி.தர்மலிங்கம்)*
கலையரசன் இராஜேஸ்வரி.

கல்வயல்,
சாவகச்சேரி.
(40820)(46-18-19-42)



## முதலாம் ஆண்டு நினைவலைகள்

*தோற்றம்*
28 - 02 - 1945



*மறைவு*
08 - 10 - 2004

## அமரர் சின்னத்துரை நவரத்தினம்

*ஓராண்டு சென்றாலும் உங்கள்*
*நினைவு என்றும் மாறவில்லை!*
*உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*

**54/16, ஆத்திசூடி வீதி ,**
**கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.** (40931)(18-19-42)

**- குடும்பத்தினர்.**



## 12ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
07 - 09 - *1934*



மறைவு
20 - 09 - *1993*

## அமரர் E.K. ஆறுமுகம்

*(முன்னாள் இ.போ.ச.காப்பாளர்*
*ஹோமகம, ஹற்றன், பருத்தித்துறைச்சாலை)*

அயராத உழைப்பே நல்வாழ்க்கையைத் தரும்
என்பதை சொல்லிலும், செயலிலும் எடுத்துக்காட்டி
எங்களை நன்நிலைக்குக் கொண்டுவந்த தந்தையே!
மறைந்த உங்களை எங்களின் உயிர் இருக்கு மட்டும் மறவோம்
உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், நண்பர்கள்,
உற்றார், உறவினர்கள்.

புது வீதி,
வல்வெட்டி. (40956)(46-18-19)

# கட்புலக் காட்சி, ஆக்கபூர்வமான செயற்பாடு சித்திர மாணவர் இதனை உணர்தல் அவசியம்

**யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி சித்திரத் துறை நடத்தும் 'பேசும் தூரிகை' ஓவியக் கண்காட்சி நேற்று ஆரம்பமானது. அந்தக் கண்காட்சியின் முக்கியம் குறித்து விளக்குகின்றது இந்தக் கட்டுரை.**

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சித்திரக்கலைத்துறையினர் 'பேசும் தூரிகை' என்னும் ஓவியக் கண்காட்சியினையும் தற்போது நடத்தி வருகின்றனர். 'துகிலிகை' என்னும் காலாண்டு ஓவியச் சஞ்சிகையும் வெளியிடவுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் சித்திரக்கலைத் துறை பாடத்துறை வீழ்ச்சியடைந்துள்ளமையானது பல்வேறு மட்டங்களிலும் உணரப்பட்ட ஒன்றாக வுள்ளது. ஆசிரியர் பற்றாக் குறையும் போதியளவு பாட நூல்கள் வசதியின்மையும் இதற்கான காரணங்களுள் முக்கியமானதாகக் கொள்ளப்படுகின்றன. தவிர, இக்கலைத் துறைசார்ந்த தேடலும், ஆர்வமும் பங்கேற்பும் மட்டான அளவிலேதான் நகருகின்றன. பாடசாலைகளும் சமூக நிறுவனங்களும் இதுதொடர்பான விழிப்புணர்வை நாடவேண்டிய நிலையில் இருந்து விலகி நிற்பதாகவே தோன்றுகின்றது. ஏனைய பாடங்களில் விசேட, திறமையைப் பெற்ற மாணவர்கள் பலர் சித்திரத்துறையில் சித்தியின்மையைப் பெற்றிருப்பதை பல நகரப்புறப் பாடசாலைகளின் பொதுப்பரீட்சை முடிவுகளில் காணக்கூடியதாக உள்ளது.




வெளிவர இருக்கும் ஓவிய சஞ்சிகை


ஓவியர் வாசனின் 'கறுத்த கடல்'

ஆகவே, இத்துறையில் மாற்றங்களை உள்வாங்கி நகரவேண்டிய அவசியம் இன்றுள்ளது. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சித்திரக்கலைத்துறையினர் இத்துறைசார் வளர்ச்சிக்கு தம்மாலான பங்கு பணிகளைப் பாடசாலைகளிலும் கல்லூரியிலும் ஆற்றிவருகின்றனர். கற்றல் - கற்பித்தல் செயற்றிட்டங்களை விரிவுபடுத்தல், கண்காட்சிகளை நடத்துதல், போட்டி செயற்றிட்டங்களை நடத்துதல், பிரசுரங்கள், நூல்கள் என்பவற்றை வெளியிடுதல் மற்றும் கள ஆற்றுகைகள் மேற்கொள்ளல் போன்றவை இதன் சில பணிகளாகும்.

இந்த வகைச் செயற்பாடுகளில் முக்கியம் வாய்ந்தது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலை மன்றம் வருடாந்தம் நடத்தும் 'அழகெழல்' ஆகும். அதன் தொடர்ச்சியான ஒரு செயற்றிட்டமே தற்போதைய கண்காட்சியும் சஞ்சிகை வெளியீடும் ஆகும்.


ஓவியக் கண்காட்சியில் முகிழ்நிலை ஆசிரியர்களால் ஆக்கம் பெற்ற படைப்புகள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. இவை ஓவியங்களாகவும் மாதிரிகளாகவும் பல்வேறு மட்டத்தில் ரசனையைத் தூண்டக்கூடிய வகையில் அமையவுள்ளன. கல்வி, சமூகம், பொருளாதாரம், இயற்கை அழிவு, யுத்தம் போன்ற பல்வேறு கோணங்களில் இது கலைக்களமாகப் பிரசவிக்க இருக்கிறது. சித்திரக் கலையைக் கற்கும் மாணவர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் நல்லதோர் கலை விருந்தாக இது அமையும். மேந்தலை எறியி மூலமான விளக்கங்கள் 'மல்றிமீடியா' விவரணங்கள், கணனி மூலமான ஓவியப் படைப்பாக்கங்கள், தொலைக்காட்சி விவரணங்கள், பாடத்துறைசார் விளக்கங்கள் போன்றவை இக்காட்சிக்கு மெருகூட்டும்.


'யுத்தப் பூக்கள்'

**க.ரட்ணேஸ்வரன்**
**இணைப்பாளர், நுண்கலைத்துறை, யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.**

'ஓவியத்தின் பணி, புறஉலகின் தோற்றத்தை வெறுமனே பிரதிசெய்வதோ அன்றி மெய்யான நிகழ்ச்சிகளைப் பிரதிபலிப்பதோ அல்ல. அது முற்றிலும் ஒரு புதிய கட்புல தோற்றத்தைத் தருதல் வேண்டும்" என்ற வெளிப்பாட்டு வாத (Expressioinism) ஓவியர் போல்கிளியின் சிந்தனைக்கேற்ப யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி சித்திரக் கலைத்துறை 2ஆம் அணி மாணவன் எஸ். என்.வாசனின் 'நெஞ்சு கனத்த உணர்வுகள்' தூரிகைத் தூறலாகப் பொழியப்பட்டு இருக்கின்றது. பல்வேறு கோணங்களில் ஓவிய மொழியையே ஜீவியமாகக் கொண்டுள்ள அக்கலைஞனின் படைப்புக்கள் பார்ப்பதற்கு அற்புதமானது. வெறும் தூரிகையோடும் வர்ணத்தோடும் மட்டில்லாது எந்த ஊடகங்களை வலிமையாக்க முடியுமோ அந்த எண்ணத்தை திண்ணமுற அமைப்பது அவனது அபூர்வ அழகியலாற்றல்..... அது மிக அற்புதம்..... இவ்வாறு பல இளம் ஓவியர்களின் காத்திரமான படைப்புக்கள் இங்கு பார்வைக்கு விருந்தாகின்றது.

'துகிலிகை' என்கின்ற காலாண்டு ஓவிய சஞ்சிகை ஒன்றும் இந்நாளில் வெளிவர இருக்கின்றது. பாடசாலையில் சித்திரக் கலை பயிலும் மாணவர்களுக்கும், கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் பயன்தரும் வகையில் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை இது வெளிவர இருக்கிறது. சித்திரக்கலை பற்றிய அறிமுறைகள் அருந்தலாக இருப்பதை நிவர்த்திசெய்யும் நோக்குடன் இது வெளியிடப்படுகின்றது.

'கல்விக் கறை'


ஆயிரம் போதனைகளைவிட ஆக்கபூர்வமான ஒரு கட்புலக் காட்சி மேலானது. இதனைக் கருத்தேந்தி குறிப்பிட்ட காலங்களில் ஓவியக் கண்காட்சியில் கலந்துகொண்டு பயன்பெற அனைத்துக் கலை ஆர்வலர்களையும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி சித்திரத் துறை அழைக்கின்றது.


பேராயர் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற எஸ்.ஜெபநேசன் அடிகளாரைக் கௌரவித்து பார்ராட்டி சங்கானை தென்னிந்திய திருச்சபையினரால் நடத்தப்பட்ட நிகழ்வில், சபையின் நிர்வாக உறுப்பினர் கே.எஸ்.இராஜ்குமார், அடிகளாருக்குப் பொன்னாடை போர்த்துக்கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.
(மு.சந்திரகுமார், சங்கானைச் செய்தியாளர்)

# சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர் பட்டப் பரீட்சைகளுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.8

யாழ். சைவபரிபாலன சபையினரால் நடத்தப்படும் சைவசித்தாந்த பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் பட்டப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பட்டப் பரீட்சைகளுக்குத் தோற்ற விரும்புவோர் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவேண்டும் எனச் சைவபரிபாலன சபையின் தலைவரும், சபையின் பரீட்சைச் செயலருமான சைவப்புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார்.

இதற்கிடையில் அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தினால் நடத்தப்படும் இளஞ் சைவப்புலவர், சைவப் புலவர் பட்டப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன என்றும் -

இதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# நூல் விரிசை



நூல்: **உயிரோடிருத்தல் - கவிதைத் தொகுதி**
எழுதியவர்: **யாத்திரீகன்**
வெளியீடு: **மீளுகை 2 இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.**

யுத்தகாலங்களின் தடங்கள் தொடர்ச்சியாக ஏற்படுத்திய அழுத்தங்களால் கவிதை புனைய ஆரம்பித்ததாகக் கூறிக்கொள்ளும் 'யாத்திரீகன்' சமகாலத்தின் நம்பிக்கை தரும் இளங்கவிஞர்களில் ஒருவர்.

ஒரு பயணியாக, தனது அனுபவங்களையும், தான் சார்ந்த உலகத்தின் தரிசனங்களையும் சுட்டிப்பாகக் கவிதையாக்கியிருக்கிறார் அவர். தனது 'உயிரோடிருத்தல்' என்ற கவிதைத் தொகுதி மூலம் தன்னை அடையாளப்படுத்திய யாத்திரீகன், ஏற்கனவே எழுதி, பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளியான தனது 21 கவிதைகளைத் தொகுப்பாக்கியுள்ளார்.

சமகாலத்தின் எல்லாக் கவிஞர்களைப் போலவே யாத்திரீகனும் யுத்தமும், இழப்புகளும் இடப்பெயர்வுகளுமாக வாழ்வை நலிக்கும் விடயங்களைத் தனது கவிதை மொழியில் பேசுகிறார். புனைவுகளும் அணிகளுமற்ற நேரடியான நறுக்குத்தெறித்த வார்த்தைகளாக அவை வெளிப்பாடு அடைகின்றன.

யுத்தத்தின் தீயில் முகிழ்த்த கவிதைப் படைப்பாளிகளுள் ஒருவரான யாத்திரீகன் யுத்தத்தின் கொடூரமிகு வாழ்வின் அகநிலை சார்ந்துபார்க்கும் அதேவேளை, அதன் தாக்கம் காரணமாக வாழ்க்கை மீது கேள்வி எழுப்பும் வண்ணமாகத் தனது கவிதைகளைப் படைத்துள்ளார்.

சு.வில்வரத்தினத்தின் கனதியான முன்னுரையுடன் வெளிவந்துள்ள இந்நூலுக்குத் தமிழக ஓவியர் புகழேந்தி அட்டைப்படம் வரைந்துள்ளார். பார்வை அகலிப்பும், கலை நுட்பமான வார்த்தைக் கோர்ப்பும் அமையும் வண்ணமாக இவரது எதிர்காலக் கவிதைகள் இருக்குமெனும் நம்பிக்கையை 'உயிரோடிருத்தல்' தொகுதி நமக்குத் தருகிறது.

**- இயல்வாணன்.**



நூல்: **கிராமத்தின் சிரிப்பு**
எழுதியவர்: **க.அருந்தவராஜா**
வெளியீடு: **யாழ். செங்குந்த இந்துக் கல்லூரிச் சமூகமும் இணுவில் தெஸ்பியன் கலை வட்டமும்.**

நகைச்சுவையைப் பல்வேறு தளங்களில் வெளிப்படுத்தல் இந்நூலின் நோக்கமாக அமைகின்றது. நகைச்சுவைகள் மறக்கப்படமுடியாதவையாகவும், சவால் விடுப்பை உட்பொதிந்தவையாகவும் அமைகின்றன. மனிதரை உறுத்தும் நெருக்குவாரங்கள் மாற்றப்படமுடியும் அல்லது மேலும் இறுக்கப்படமுடியும் என்ற இரு தளங்களில் நகைச்சுவை ஆக்கங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. மனித இயக்கங்களோடும், இடைவினைகளோடும் எழும் முட்டாள்தனமான சிந்தனைகளைப் புடமிட்டுக்காட்டும் உள்ளடக்கம் நகைச்சுவையாக்கங்களில் இருத்தல் அவற்றுக்குரிய பலமாகும்.

சமுகத்தில் அனுகூலமிக்கோருக்கும், அனுகூலங்கள் இழந்தோருக்குமிடையே தோன்றிய முரண்பாடுகள் நகைச்சுவையாக்கத்துக்குரிய சமூகத் தளங்களாக அமைந்தன. இதை வேறுவிதமாகக் கூறுவதானால் வாழ்க்கையின் தோல்விகளின் விசைகளாலும் மகிழ்ச்சியின் மிகைப்பாய்ச்சல் விசைகளாலும் நகைச்சுவையாக்கங்கள் பாய்ச்சலிடுவதைக் காண முடியும்.

''நகைச்சுவையை எழுதாதிருத்தல் கடினம்; எழுதுதல் அதிலும் கடினம்.'' இக்கருத்து நகைச்சுவையாக்கத்தின் வலிமையை ஒரு வகையிலே சுட்டிக்காட்டுகின்றது.

இவ்வாறாக அமையும் நகைச்சுவை வெளிப்பாடுகளை உள்ளடக்கிய ஒரு தனி நூலாக க.அருந்தவராஜாவின் 'கிராமத்தின் சிரிப்பு' அமைந்துள்ளது. நாட்டுப்பாடல்களில் நகை ரசமும் கல்வியும், கவிகளில் நகைப்பு, ஊடகச் சிரிப்புக்கள், உரையாடல்களில் நகைச்சுவைத் துணுக்குகள், தமிழ் சிரிக்கிறது, சந்தர்ப்பச் சிரிப்பு, வைத்தியின் நகைச்சுவைகள் என்ற தலைப்புகளிலே நூலின் அமைப்பு இடம்பெற்றுள்ளது.

எமது கிராமங்களிலே வாழ்ந்த வைத்தி போன்று நகைச்சுவை வல்லவர்களின் வாய்மொழி நகைச்சுவை மரபுகளைத் தொகுக்கவேண்டிய தேவையையும் இந்நூல் உணர்த்தி நிற்கிறது.

- கலாநிதி **சபா.ஜெயராசா**
*கல்வியியற் பேராசிரியர்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

# யாவருக்கும் பயனுள்ளவராய் வாழ்ந்த பெருமாட்டி



வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் ஒன்றாகிவிட்டார் திருமதி திலகவதி தர்மராசா. தர்மமே போற்றும் பண்பாளன் தர்மராசாவை நல்ல மணாளனாகப் பெற்று இல்லறம் நல்லறமாக வாழ்ந்தகாலம் 61.

அன்னார் வாழ்ந்த காலங்களில் எல்லோர் மனதையும் கவர்ந்த; நல் மதிப்பைப்பெற்ற; ஒப்பற்ற ஒரு தெய்வப் பிறவி. கல்வி, செல்வம், சிறப்புகள், உற்றார், உறவினர், நண்பர்கள் எனச் சூழ உள்ளவர்களுடன் வாழ்ந்த சீமாட்டி.

எண்ணங்களை ஆதரித்துப்போகும் கணவருடன் இணைந்து செய்த அறப்பணிகள் பலப்பல. யார் யாருக்கு என்னென்ன காலம் இடமறிந்து செய்தார்கள் என்பதைப் பயனடைந்தோர் எண்ணி உள்ளம் உருகுகின்றனர். அன்னாரின் அறப்பணிகள் இவைதான் என்று ஒவ்வொன்றாகச் சொல்வதிலும் அடியேன் மனதில் ஆழமாகப் பதிந்து இப்படியும் ஒரு பிறவியா என எண்ணி வியக்கும் ஒரு சம்பவம்.

நெருங்கிய ஒருவர் வழியால் வருகிறார். தனி வழி வந்த பெண்ணின் கழுத்தில் மின்னிய தாலியைத் திருடர்கள் அபகரித்துப் போனதை அறிந்து பதறிப்போன அன்னையார், தன் கழுத்துத் தாலி நிலைக்கவேண்டுமென நினைத்துப் புதியதோர் தாலி செய்வித்து அப்பெண்ணின் கழுத்தில் தாலி மின்ன வைத்து மகிழ்ந்த புண்ணியவதி அவர். "எனக்கு எனக்கென்று வாழும் இக்காலத்தவர்கள் மத்தியில் இப்படியும் ஒரு பிறவியா'' என்று எண்ணவைத்த பெருமாட்டி.

ஊர் நடுவேயுள்ள கிணறு யாவர்க்கும் பயன்படுவதுபோல் கணவன், இனபந்துக்கள், பாசத்தோடு வளர்ந்தவர்கள், அயலவர்கள், நண்பர்கள் யாவர்க்கும் பயனுடையராய் வாழ்ந்து பரமபதம் அடைந்து, அனைவரது உள்ளங்களிலும் என்றும் அவர் அழியா இடம்பெற்றுவிட்டார். கனடாவில் இருந்த காலத்தில் கட்டுரைகள், கதைகள் போன்றவற்றை கனடா வானொலியில் வெளியிட்டுள்ளார்.

**செல்வி பா.வேலுப்பிள்ளை,**
இளைப்பாறிய ஆசிரியர்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

2 பெரிய ஆட்டுக்கடாக்கள் விற்பனைக் குண்டு. தொடர்பு: 21, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குழி. (40982)

## காணி விற்பனைக்கு

கொழும்புத்துறை, ஆனந்தன் வடலி வீதி, 3ஆம் ஒழுங்கை கொழும்புத்துறையில் 2 பரப்புகளைக் கொண்ட 2 துண்டுக் காணிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சக்தி, இல.3, கொட்டைக்காடு லேன், கோண்டாவில் கிழக்கு, T.P.No. 0777474775, 021 222 3015, 021 222 3056. (40841)

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, கருவேலடி வீதியில் யாழ்.பல்கலைக்கழகத்திற்குச் சமீபமாக 1¾ பரப்பில் குழாய்க்கிணற்றுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: காஞ்சனா பிரேம் குமார், கருவேலடி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். T.P.No. 021 4590359. (40779)

## காணி, வீடு விற்பனைக்கு

சில்லாலையில் கத்தோலிக்க சூழலில் கதிரைமாதா ஆலயத்திலிருந்து 100m இற்குள் கல்வீட்டுடன் 6 பரப்புக் காணி விற்பனைக் குண்டு. தொடர்பு: போல் சாமிநாதன், மே/பா, அன்ரன் செல்வராசா, "ஆவே மரியா" சில்லாலை, பண்டத்தரிப்பு. T.P.No. 0777 270210 ஞாயிற்றுக்கிழமைகளில் 24 மணி நேரமும் ஏனைய தினங்களில் மாலை 6 மணி தொடக்கம் காலை 6 மணி வரை தொடர்புகொள்ளலாம். (40841)

## மோட்டார் சைக்கிள், கார் வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு இருபாலாருக்கும் மோட்டார் சைக்கிள், மோட்டார் கார் வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன் குளிரூட்டப்பட்ட திருமணக் காரும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:360/10, பிரதான வீதி (பஸ்தியன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். 077 3222999, 077 6991899. (40841)

## தவறிவிட்டது

'அருளானை', பன்னாலை, தெல்லிப்பழையைச் சேர்ந்த சிவஞானம் செந்தூரன் என்பவரது தேசிய அடையாள அட்டையும் விசேட அடையாள அட்டையும் சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் சிறுதொகைப் பணம் என்பவற்றுடன் பேர்ஸ் ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர் மேற்கூறிய முகவரியில் ஒப்படைக்கவும். T.P. 0779004003. (41019)

05.10.2005 காலை மந்திகை பெற்றோல் செற்றிலிருந்து முதலாம் கட்டைச் சந்தி, நாவலடி வியாபாரி மூலைக்கு மோட்டார் சைக்கிளில் சென்றபோது கைத்தொலைபேசி, தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதிப்பத்திரம்,றபர் முத்திரைகள், அலுவலக டயறி (FIELD NOTE BOOK) ஆகிய முக்கிய ஆவணங்களுடன் பாக் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் எம்.சண்முகராஜா, வேணி இல்லம், புலோலி தெற்கு, புலோலி அல்லது 060-21 2839 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (41020)

## புறொயிலர் தேவை

புறொயிலர் கோழி கொள்வனவு செய்யப்படும். தொடர்பு: வீனஸ்பாம், 79/12, பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி. T.P.: 712513721, 0777 252478. (41003)

## அமெரிக்க விசா

55050 அமெரிக்க விசா லொத்தர் Lateat விண்ணப்ப விவரங்களை இலவசமாகப் பெற சரியான விலாசத்துடன் தொடர்புகொள்க. குடும்பத்துடன் அமெரிக்கா செல்ல அரிய வாய்ப்பு. Penquin Book Shop, B2/F23 Bloemendhal flats, Colombo - 13, T.P.: 077 3081764, 2438367 Internet மூலம் அமெரிக்காவிற்கு அனுப்பி Receipt அனுப்பப்படும். (சி/45419)

## ஜோதிடம்

கைரேகை, ஜாதகம் கொண்டு உங்களின் எதிர்கால பலன்களை அறிந்து கொள்ளவும் உங்கள் வாழ்வில் வெற்றி பெறவும் ஆலோசனை பெற்றுக்கொள்ளவும் ஒருமுறை நாடுங்கள். இந்திய பரம்பரை ஜோதிடர் அருள்வாக்கு அம்பிகா அம்மா, 121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (40752)

## உளநல நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.8

உலக உளநல தினத்தை முன்னிட்டு சுக வாழ்வு நிலையம் நடத்தும் விசேட நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு குடத்தனை வடக்கு அமெரிக்க மிஷன் பாட சாலையில் இடம்பெறவுள்ளது.

(ஓ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



06-10-2005 இல் யாழ்.பல்கலை கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலைமாணி B.A பட்டம் பெற்ற

செல்வன்


**திருச்செல்வன் வாமதேவன்** (லெனின்)

அவர்களை மனதாரவாழ்த்துகின்றோம்.
அப்பா, அம்மா, ரவி, டயஸ், பபி, லலி, யசோ, பிரியா, திலீப், சீலன், அன்ரன், ராஜேஸ், பவானி, ராணி, தினேஷ்.
மருமக்கள்: டிஜான்சியா, டிவின்சியா, அனோஜ், சுகி,அபி.
பெறாமக்கள்: தனுஷ்ரன், விதுஷனா, கரன்சியா.

**A.சீலன்,**
இல.09, மூளாய் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 077 6172431.

(41012)(46-18-19-42)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.அல்போன்ஸ் அன்ரனி வின்சன் மரியநாயகம்**
B.B.A.(Hons)

யாழ்.பல்கலைக்கழகத்தில் 2005.10.07 அன்று முதுகல்வி மாணிப் பட்டம் பெற்ற எமது பாடசாலையின் உதவி அதிபரும் பழைய மாணவரும் ஆகிய இவரை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/கலட்டி றோ.க.த.க.பாடசாலை,
பருத்தித்துறை.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பெற்றோர்கள்,
பழைய மாணவர்கள்.

(41018)(42.18.19)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



06-10-2005 அன்று வியாழக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற

**திருமதி சோபிதா சிவகுமார்**
B.A.(Hons)

அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் பல பட்டங்களைப் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆவரங்கால்.

நாதன் மாமா
குடும்பத்தினர்.

(41017)(46.18.19.42)

## சாரதி தேவை

கொழும்பிலே உள்ள விநியோக நிறுவனம் ஒன்றுக்கு டெலிவரி வான் செலுத்துவதற்கு அனுபவமுள்ள சாரதி தேவை. தங்குமிட, உணவு வசதிகள் செய்து தரப்படும்.
தொடர்பு: **0777-393827.**

(41023)(42.18.19)

## IBMS

**விசேட பிரிவுகள் ஆரம்பம்**

பிரிவு I : 09.10.2005
பிரிவு II : 10.10.2005
பகல் 10.00 மணி

**அனைத்து Diploma கற்கை நெறிகளும் ஆரம்பமாகவுள்ளன**

பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப்பெற்ற மாணவர்களுக்காக கீழ்வரும் பயிற்சி நெறிகள் விசேடமாக ஆரம்பமாகவுள்ளன.

- Dip. in Visual Basic Programming
- Dip. in C++ Programming
- Dip. in AutoCAD

Head Office : # 410, K.K.S. Road, Jaffna
T.P. No.: 021 222 8232

## மிதிவெடியில் சிக்கி இளைஞர் படுகாயம்!

உரும்பிராய்,ஒக்.8

தோட்டப் பணியில் ஈடுபட்டிருந்தவர் மிதிவெடியில் சிக்கி இடதுகாலில் படுகாயமடைந்தார்.

உரும்பிராய் வடக்கில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்தவரான செல்வரட்ணம் ரஜிக்கான் (வயது 25) என்பவரே படுகாயமடைந்தார்.

இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் நடைபெற்ற இடம் மிதிவெடி அகற்றப்பட்ட பிரதேசமாக அங்கு கண்ணிவெடி அகற்றிய நிறுவனத்தால் பிரகடனப் படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஓ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

*சைவப் புலவர், சைவபூஷணம், சிவநெறிச்செம்மல், சிவனடியார் மணி, சிவநெறிக் காவலர்.*

**திரு.வல்லிபுரம் கந்தசாமி**



அவர்கள் கௌரவ கலாநிதிப் பட்டம் பெற்றதையிட்டு அகமகிழ்ந்து மனதார வாழ்த்துகின்றோம்.

சாந்தையர்மடம் கற்பகவிநாயகர் கோயில் தர்மபரிபாலன சபையில் ஐம்பத்தாறு வருடங்கள் மகத்தான சேவையாற்றிக்கொண்டும் கோயிலில் சைவ சமய அபிவிருத்தி கழகத்தை ஸ்தாபித்து அதில் நாற்பத்திரண்டு ஆண்டுகள் சிறந்த சமயப் பணிகளை செய்தும் வருகின்றார்.

இப்பெரியார் ஆரோக்கிய வாழ்வுடன் நீடிய ஆயுளும் பெற எல்லாம் வல்ல கற்பக விநாயகனை வேண்டி நிற்கின்றோம்.

தர்மபரிபாலன சபை
சைவசமய அபிவிருத்திக் கழகம்.

சாந்தையர் மடம்,
கற்பகவிநாயகர் கோயில்,
யாழ்ப்பாணம்.

(41011)(46-18-19-42)

## JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE

### விவசாய சான்றிதழ் பயிற்சிநெறி

நான்கு மாதகால இலவச பயிற்சி நெறி. விவசாய மூலதத்துவம், பயிரியல் பூங்கனியியல், மிருக பரிபாலனம் ஆகிய பாடநெறிகளை உள்ளடக்கிய விவசாயச் சான்றிதழ் பயிற்சி நெறிக்கு இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் 17-26 வயதுக் குட்பட்டிருக்க வேண்டும்.

இப் பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் 19.10.2005 புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தகைமைப் பத்திரங்கள், கிராம சேவையாளரின் நற்சான்றிதழ், வேறு இரு நற்சான்றுப் பத்திரங்களுடன் சமுகமளிக்கவும்.

- பயிற்சி நெறிக்காலத்தில் உதவு தொகை வழங்கப்படும்.
- பயிற்சி நெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பெண்களுக்கு விடுதி வசதி உண்டு.

மேலதிக விவரங்களுக்கு:-

**அதிபர்**
*யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்*
மருதனார்மடம்,
சுன்னாகம்.

(41009)(54.18.19.42)

## நீங்காத நினைவுகளில்...



சுப்பிரமணியம் நடேசலிங்கம் — செந்தூரன் பரீட்சித் — நடேசலிங்கம் செந்தூரன்

மலர்வு 23.09.1937 — 18.11.2003 — 27.03.1972
உதிர்வு 11.09.1988 — 26.08.2004 — 18.10.2004

கடவுளே! உனக்குக் கண் இல்லையா?
வையகந் தனில் களிப்புட னாமிங்கே
கூட்டுக் குடும்பமாய் வாழ்வது கண்டு
கண்ணுற்ற காலனவன் தனையனை முதலழைத்து
பின் தவிப்புறுதல் தந்தையைப் பறித்தானோ?
இறைவா...?
பிறப்பவ ரெல்லாரும் இறப்பது நியதி
ஆனால், இடையிலே எம்மைத் தவிக்கவிட்டு
பறித்திடலி லென்ன நியாயம் கண்டாய்?
இன்று நாதியற்ற அநாதைகளாய் – நாம்
தவிப்பதைக் கண்டு மகிழவா – எம்மை
இந்த நிலைக்கு இட்டுச் சென்றாய்?

மூத்த விநாயகர் கோயிலடி,
கரணவாய் தெற்கு, கரணவாய்.
T.P: 077 3222875.

தகவல்:
குடும்பத்தினர்.

(C/45495)

# மனிதக் கேடயங்களாகப் பலஸ்தீனர்களை இஸ்ரேல் இராணுவம் பயன்படுத்தக்கூடாது!

## அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவு

ஜெருசலேம்,ஒக்.8


பாலஸ்தீனத் தீவிரவாதிகளுக்கெதிரான நடவடிக்கைகளின்போது மக்களை மனிதக் கேடயங்களாக இஸ்ரேல் இராணுவம் பயன்படுத்தக் கூடாது என இஸ்ரேலிய உச்ச நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.

அவ்வாறு செயற்படுவது மனித உரிமைகள் தொடர்பான சர்வதேசச் சட்டத்தை மீறும் செயலாகும் எனவும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

2002ஆம் ஆண்டு பாலஸ்தீனத்தின் மேற்குக் கரைப் பகுதியில் ஹமாஸ் தீவிரவாதிகளைத் தேடி வீடு வீடாக இஸ்ரேல் இராணுவம் சோதனை நடத்தியது. ஒரு தீவிரவாதியின் வீட்டில் சோதனை நடத்த முற்பட்ட படையினர் நிதால் தாரக்மே (வயது -19) என்ற மாணவரை முன்னால் செல்லவிட்டு அவர் பின்னாலேயே சென்றனர். குறித்த வீட்டுக் கதவைத் தட்டுமாறு நிதாலிடம் அவர்கள் கூறினர். கதவைத் தட்டியவுடன் உள்ளே இருந்தவர் சுட்டதில் அந்த மாணவர் பலியானார். அதைத் தொடர்ந்து நடந்த சண்டையில் அங்கத் தீவிரவாதியும் கொல்லப்பட்டார்.

அந்த அப்பாவி மாணவரை மனிதக் கேடயமாக இஸ்ரேல் இராணுவம் பயபடுத்தியதற்கு பல அமைப்புகள் கண்டனம் தெரிவித்தன. இஸ்ரேலின் 'அதல்லா' என்னும் மனித உரிமை பாதுகாப்பு அமைப்பும் அதைக் கண்டித்தது.

பலஸ்தீனர்களை மனிதக் கேடயமாக இஸ்ரேல் இராணுவம் பயன்படுத்துவதை எதிர்த்து அந்த அமைப்பு இஸ்ரேல் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. அதை விசாரித்த நீதிமன்றம், மனிதக் கேடயங்களாக பலஸ்தீனர்களைப் பயன்படுத்தும் இஸ்ரேல் இராணுவத்தின் செயலுக்குத் தற்போது தடை விதித்துள்ளது. (க)



விமானப்படை தினத்தை முன்னிட்டு டில்லியில் 'சூர்யா கிரண்' விமானத்தின் ஒத்திகை அணிவகுப்பு நடந்தது.

உலக அரங்கில்

# அமெரிக்காவுடன் தீவிரவாதிகள் பேரம்

''ஈராக்கில் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டுமானால் சதாம் ஹுசைன் தூக்கிலிடப்படமாட்டார் என உறுதியளிக்கப்பட வேண்டும் என சதாம் ஆதரவுத் தீவிரவாதிகள் நிபந்தனை விதித்துள்ளனர். இது தொடர்பாக அமெரிக்காவுடன் பேச்சுநடத்தவும் அவர்கள் முன்வந்துள்ளனர்.''- என ஈராக் ஜனாதிபதி ஜலால் தலபாணி எகிப்துப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

''2003ஆம் ஆண்டு அமெரிக்கப்படையினரால் வெளியேற்றப்பட்ட சதாம் ஆதரவாளர்களே தற்போது ஈராக்கில் நடைபெறும் தாக்குதலுக்குப் பின்னணியில் உள்ளனர். தாக்குதலை நிறுத்தவேண்டுமானால் சதாமுக்கு மரண தண்டனை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படும் வழக்கு விசாரணையை நிறுத்த வேண்டும் என அவர்கள் நிபந்தனை விதிக்கின்றனர். இது தொடர்பாக அமெரிக்காவுடன் பேச்சு நடத்தவும் அவர்கள் முயற்சிக்கின்றனர் என்றார் அவர்.

சதாம் ஹுசைனை விசாரிக்க ஈராக்கில் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. மனிதாபிமானத்துக்கு எதிராகச் செய்த குற்றங்களுக்காக எதிர்வரும் ஒக்டோபர் 19 இல் சதாம் ஹுசைன் விசாரிக்கப்படவுள்ளார். ஈராக்கில் 1982இல் 143 பேர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக சதாம், ஈராக்கின் முன்னாள் துணை ஜனாதிபதி மற்றும் சதாமின் உறவினர்கள் உட்பட 6 பேரிடம் விசாரணை நடத்தப்படவுள்ளதாக சிறப்பு நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இதில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் சதாமுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அ[illegible]ா, சதாம் மீதான வழக்கு விசார[illegible]ருக்கான செலவை அரசே ஏற்கவேண்டும் என சதாமின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (க)

# பூமி அதிக வெப்பமடைவதால் சில உயிரினங்கள் அழியும் ஆபத்து

பூமி அதிக வெப்பமடைவதால் உலகில் சிலவகை உயிரினங்கள் முற்றிலுமாக அழிந்துபோகக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது என ஐரோப்பிய விலங்குகள் மற்றும் பறவைகள் இயல் நிபுணர்களின் புதிய ஆய்வு அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பூமி அதிக வெப்பமடைவதால் உலகில் உள்ள சிலவகையான பறவைகள், பாலூட்டிகள் மற்றும் ஊர்வன ஆகியன வழக்கமான பருவகால இடம்பெயர்வுகளைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், இந்த உயிரினங்கள் முற்றிலுமாக அழிந்து போகக் கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

சகாரா பாலைவனம் விரிவடைந்து வருவதால் தெற்கு ஆபிரிக்காவில் இருந்து ஐரோப்பாவுக்கு வருடந்தோறும் பறந்து வரும் 'ஸ்வால்லோ' பறவைகள் தொடர்ந்து அவ்வாறு செய்வது இயலாத காரியமாகி விடும்.

கடல்மட்டம் உயர்ந்து வருவதால் ஆமைகள் மற்றும் கரையோரப் பறவைகள் பெரிதும் சார்ந்து வாழும் கடலோரப் பகுதிகளின் சுற்றுச்சூழல் அழிக்கப்பட்டு விடும்.

அத்துடன், கடலின் வெப்பநிலை பிறக்கும் ஆமைக் குட்டிகள் ஆணாக அல்லது பெண்ணாகப் இருப்பதைத் தீர்மானிப்பதில் அதிக செல்வாக்குச் செலுத்தும் கடல் நீர் சூடாகிவருவதால் வருங்காலங்களில் சில ஆமை வகைகள் முழுவதுமே பெண் இனமாக இருந்துவிடக் கூடிய வாய்ப்புகள் அதிகம் இருப்பதாகவும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)


UNDP

## Request for Quotations

United Nations Developmen[illegible]mme, Sri Lanka invites Request for Quotations (RFQ) for the following and the do[illegible]nents could be collected from the locations given against each action:

| | |
|---|---|
| Construction of two small bridges in Karaitivu Division, Ampara | UNDP Office, 63, Jayawardenapura, Ampara. |
| Construction of drainage infrastructure in Kalmunai | UNDP Office, 63, Jayawardenapura, Ampara. |
| Construction of drainage infrastructure in Manmunai South, Eraavil Pattu, and Koralai Pattu North Divisions in Batticaloa | UNDP Office, 30, Charles Velupillai Road, Batticaloa |
| Construction of Agricultural Roads in Kirankulam, Batticaloa | UNDP Office, 30, Charles Velupillai Road, Batticaloa |
| Construction of one unpaved road in Karachichi, Kilinochchi | UNDP Office, 7, Kumaraswamy Road, Ganeshapuram, Kilinochchi |
| Construction of one unpaved road in Poonagary, Kilinochchi | UNDP Office, 7, Kumaraswamy Road, Ganeshapuram, Kilinochchi |
| Construction of one access road and ten culverts in Maratimepatti, Mullaitivu | UNDP Office, 7, Kumaraswamy Road, Ganeshapuram, Kilinochchi |
| Construction of a 2.2 km road in Point Pedro, Jaffna | UNDP Office, 121A Temple Road, Jaffna |
| Construction of drainage infrastructure in Muthur, Trincomalee | 58 Arunagiri Road, Trincomalee |
| Construction of land filled site in Kinniya, Trincomalee | 58 Arunagiri Road, Trincomalee |

**Documents to be presented for obtaining RFQ documents:**

- request letter for document on the Company's business letterhead
- ICTAD registration book (contractors are requested to be of minimum M7 level of ICTAD)

**Completed documents will be accepted at the same locations from where the documents are distributed until 3 p.m. on October 17, 2005. Documents can also be obtained from the UNDP Programme Office, Operations Manager, 202-204 Bauddhaloka Mawatha, Colombo 7, Sri Lanka or via email at procurement.lk@undp.org**

**No telephone inquiries will be solicited and UNDP reserves the right to cancel all or one of the above actions and/or reject any quotations, without assigning any reasons.**


# நீதிமன்றில் ஆஜராகுமாறு நடிகை குஷ்புவுக்கு உத்தரவு

சென்னை,ஒக்.8

பெண்களின் கற்பு குறித்து நடிகை குஷ்பு தெரிவித்த கருத்துத் தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில் குஷ்புவை நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகுமாறு தமிழ்நாடு பெரும்பலூரில் உள்ள நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெண்களின் கற்பு பற்றி நடிகை குஷ்பு பேசிய விவகாரம் தமிழ்நாடு முழுவதும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

அவருடைய கருத்தைக் கண்டித்து போராட்டமும் நடைபெறறது. அரசியல் கட்சிகளும் போர்க்கொடி தூக்கின.

குஷ்பு மீது 25இற்கும் மேற்பட்ட வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

திருவாரூர் மாவட்ட பாட்டாளிமக்கள் கட்சியின் மகளிர் அணித் தலைவி லலிதா, திருவாரூர் நீதிமன்றத்தில் நடிகை குஷ்புவிற்கு எதிராக வழக்குத் தொடர்ந்தார்.

அதில் பெண்கள் சமுதாயத்தை கேவலப்படுத்தும் விதமாகக் கருத்துத் தெரிவித்த குஷ்பு மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

வழக்கை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட நீதிபதி ஜவஹர் கடந்த 2 நாட்களாக சாட்சிகளிடம் விசாரணை நடத்தினார்.

விசாரணை முடிவில் அடுத்த மாதம் 25ஆம் திகதி நடிகை குஷ்பு நீதிமன்றில் நேரில் ஆஜராகவேண்டும் என்று உத்தரவிட்டார். (க)

# பிரிட்டனில் பேராயராக கறுப்பினத்தவர் நியமனம்

## வரலாற்றில் முதல் தடவையாக

பிரிட்டனில் கிறிஸ்தவப் பேராயராகக் கறுப்பு இனத்தைச் சேர்ந்த ஜோன் சென்தாமு நியமிக்கப்பட்டுள்ளார். பிரிட்டனின் யோர்க் உயர் மறை மாவட்டத்தின் பேராயராக கறுப்பு இனத்தவர் ஒருவர் நியமிக்கப்படுவது, அதன் வரலாற்றிலேயே இதுதான் முதல் முறையாகும்.

பிரிட்டனைத் தலைமையிடமாகக் கொண்டு செயற்படும் அத் திருச்சபை 'அங்கிலிக்கன் திருச்சபை' என அழைக்கப்படுகிறது. அத் திருச்சபையில் இது 2ஆவது முக்கியத்துவம் பொருந்திய பதவியாகும்.

உகண்டாவில் பிறந்தவரான ஜோன் சென்தாமுவின் பெயர் அப்பதவிக்கு கடந்த ஜூனில் முன்மொழியப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டது. லண்டனில் உள்ள புனித மேரி - லே - போ தேவாலயத்தில் கடந்த புதன்கிழமை பேராயர் ரோவன் வில்லியம்ஸ் தலைமையில் நடந்த பாரம்பரியச் சிறப்புமிக்க வழிபாட்டு நிகழ்ச்சியில் சென்தாமு பேராயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

சமூக சீர்திருத்த நடவடிக்கைகளை ஆதரிப்பவர் ஜோன் சென்தாமு. ஈராக் போருக்கு எதிராகத் திருச்சபை மக்களை அணிதிரட்டியவர். ''பெண்களை அங்கிலிக்கன் திருச்சபையில் ஆயர்களாக நியமிப்பதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். அதற்கு வசதியாக திருச்சபை தன் சட்டதிட்டங்களைத் திருத்துவதை ஆதரிக்கிறேன்.''- என்று கூறியுள்ளார் பேராயர் ஜோன்.

ஆண் மற்றும் பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள்தான் உலகச் சீர்கேடுகள் அனைத்துக்கும் காரணம் என்பதுபோல திருச்சபையைச் சேர்ந்த சிலர் அவர்களை கடுமையாக விமர்சிப்பதையும் கண்டித்துள்ளார் அவர். (க)

**யாழ். YMCA யினால் நடத்தப்படவிருக்கும் கீழ்காணும் இசைப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

- வாய்ப்பாட்டு சங்கீதம்
- நடனம் (பரதம்)
- வயலின்
- புல்லாங்குழல்

*விண்ணப்பப்படிவங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். போட்டிக்கான விண்ணப்ப முடிவுதிகதி 18.10.2005*

**ஆண், பெண் இருபாலாருக்கும் போட்டிகள் தனித்தனியே நடைபெறும்.**
(மேலதிக விபரங்களை YMCA அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம்)

செயலாளர்,
YMCA, Jaffna.
(சி-45498)
(21.16)

**வாழ்வகம் - விழிப்புலன் வலுவிழந்தோர் இல்லம்**
## வாணி விழா - 2005

| | |
|---|---|
| இடம் | :- **நிறஞ்சனா மண்டபம்** வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் |
| காலம் | :- 09.10.2005 ஞாயிற்றுக்கிழமை. |
| நேரம் | :- காலை 9.30 |
| தலைவர் | :- திரு. ஆ. ரவீந்திரன், (உப தலைவர், வாழ்வகம்). |
| பிரதம விருந்தினர் | :- திருமதி சரோஜினிதேவி இளங்கோவன் (மாவட்ட நீதிபதி, மல்லாகம்). |
| கௌரவ விருந்தினர் | :- செஞ்சொற்செல்வர் திரு. ஆறு. திருமுருகன் (உபஅதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி). |
| சிறப்பு விருந்தினர் | :- திரு. க. தர்மசேகரம் (B.A.) (உதவி விரிவுரையாளர், யாழ். பல்கலைக் கழகம்). திரு. து. ஜெசிந்தன் (B.A.) செல்வி க. நகுலாம்பிகை (B.A.) |

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வாழ்வகப் பிள்ளைகள்,
ஆசிரியர்கள்,
நிர்வாகசபையினர்.
(சி-45500)
(21.16.24)

## அறநெறிப் பாடசாலை பரிசளிப்பும், கலைநிகழ்வும்

யாழ்ப்பாணம், ஒக்.8

சாவகச்சேரி கிராம்புவில் படையாண்டான் தோட்டம் கந்தசுவாமி கோவில் பாலமுருகன் அறநெறிப் பாடசாலையின் முதலாம் ஆண்டு பரிசளிப்பு விழாவும் கலை விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

செ.பாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தலைமையக உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கைலாயபிள்ளை, தென்மராட்சி பிரதேச கலாசார உத்தியோகத்தர் திருமதி பத்மராணி சிவஞானராசா ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வர்.

(எ-204)

## சகல தெரிவத்தாட்சி அலுவலர்களையும் தேர்தல் ஆணையாளர் திங்களன்று சந்திப்பார்

யாழ்ப்பாணம், ஒக்.8

எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தல் பணிகள் குறித்து சகல மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களுடனும் தேர்தல் ஆணையாளர் சந்திப்பொன்றை நடத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்பு நாளைமறுதினம் திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆயத்தப் பணிகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன. மேலும் முன்னெடுக்கப்படவேண்டிய பணிகள் குறித்து சகல மாவட்டங்களையும் சேர்ந்த தெரிவத்தாட்சி அலுவலர்களுடனும் தேர்தல் ஆணையாளர் சந்தித்துப் பேசவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-202-203)

### தீயணைப்புச் சேவை தற்காலிகமாக நிறுத்தம்

யாழ். மாநகர சபை தீயணைப்புப் படையின் தீயணைப்பு இயந்திரம் பழுதடைந்துள்ளது. இதனால், மறுஅறிவித்தல் வரை தீயணைப்புச் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ். மாநகராட்சி ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் அறிவித்துள்ளார்.

இந்தத் தீயணைப்பு இயந்திரம் பல ஆண்டுகளுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டது.

இதற்கான உதிரிப்பாகங்கள் கொழும்பிலிருந்து வரவேண்டியுள்ளன. இன்னும் சில வாரங்களில் இயந்திரம் திருத்தப்பட்டு சேவையிலீடுபடும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-13)

## போட்டிப் பரீட்சை

- இந்து தர்மாசிரியர் தேர்வு
- வடக்கு- கிழக்கு மாகாணப் பொதுச் சேவைகள் பதவி
- வெளிக்கள போதனாசிரியர்கள்

இவற்றுக்கான வகுப்புகள்
ஆரம்பம்:- **08.10.2005** (3 மணி)

**புதிய உயர்கல்லூரி**, ஆரியகுளம் சந்தி, யாழ்.
(41022) (39-16-21)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

## திரு. ஆறுமுகம் குமரேசமூர்த்தி

B.A. (Hons), M.A. (Hons), M.Ed.

நவாலியூரைச் சேர்ந்த இவர் நேற்றைய பட்டமளிப்பு விழாவில் முதுமாணிப் பட்டம் **M.Ed.** பெற்று நவாலியூருக்கே பெருமை தேடித்தந்தார். அவரை மனமார வாழ்த்துகின்றோம்.

**நவாலி வாழ் மக்கள்.**
(41013) (16-21)

**யாழ்.நகரில் அலுவலக பாவனைக்கு வீடு/கடைத்தொகுதி தேவை**

யாழ்.நகரில் அல்லது அதனை அண்டிய பிரதேசத்தில் (தகவல் தொழில்நுட்ப சேவைகளை வழங்கும் தனியார் வர்த்தக நிலைய அலுவலக பாவனைக்குப் பயன்படுத்த) வாடகைக்கு வீடு/ கடைத்தொகுதி தேவைப்படுகின்றது. நேரிலோ, தொலைபேசியிலோ, மின்னஞ்சலூடாகவோ அல்லது கடிதம் மூலமோ தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி: 077 653 0191
021 228 5875
021 228 5876

பணிப்பாளர்,
ரெக்ஷாக் - வன்னிரெக்,
வன்னி தொழில்நுட்ப நிறுவகம், கிளிநொச்சி.
மின்னஞ்சல்: techshack @Vanni.org
(41012) (16-21)

**MCS** *324, Palaly Road, Jaffna.* (Near Alady Junction)



யாழ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில்
அதி உயர் விருதான
பேராசிரியர் துரைராஜா ஞாபகார்த்த
தங்கப்பதக்கத்தை பெற்றுக்கொள்ளும்
எமது நிறுவன விரிவுரையாளரான
**கணேசமணி குமரன் BBA(Hons),MCP**
அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி
அடைவதோடு மேலும் பல பட்டங்கள் பெற்று
சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.




பிறப்பிடம்:- யாழ்ப்பாணம்
வசிப்பிடம்:-சுவிஸ்
குடும்பத்தின் குலவிளக்கே
குணக்குன்றே குமுதினியே
நாள்கள்சில மறைந்தாலும் - உன்
அன்பு முகம் மறைந்திடுமோ?
என்றென்றும் நினைவுகளாய்
எம் நெஞ்சில் வாழ்ந்திருப்பாய்

பிறப்பிடம்:- சுவிஸ்
சபீனா பூவே உன் மரணத்தில்
உறைந்து போனோம்
உன் மழலைப் புன் சிரிப்புகளை
எங்கே காண்போம்
மறுபிறவி என்றொன்று
இருக்குமென்றால்
கண்ணே நீ பிறப்பெடுப்பாய்
எங்கள் வீட்டில்

சுவிஸ்.
[கணவன்-தந்தை]
துரைராஜ்-உதயராஜ்.
(40354) (52-16-18)

## மரண அறிவித்தல்

### வீரசிங்கம் தனபாலசிங்கம் (இ.போ.ச. சாரதி)



வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் தனபாலசிங்கம் நேற்று (07.10.2005) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வீரசிங்கம் -அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் இராசா -பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் நல்லம்மாவின் அன்புக் கணவரும் ரமணன் (சுவிஸ்), ரகுணன் (சுவிஸ்), ரமணி (ஜேர்மனி), ராகவன், ராதிகா (இத்தாலி), ரஜிகா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் மாலா, தயாளவதனி, கணேசமூர்த்தி, வரதராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ராகவன்** (மகன்).
கந்தரோடை மேற்கு,
சுன்னாகம்.
(41021)(21.16)

## INTERNATIONAL SCHOOL - MANIPAY "a School with a difference"

**GRAND OPENING - JANAURY 2006**

1. MONTESSORI ON WARDS UPTO GRADE 7 2. CHILDREN FROM AGES 01 YEAR TO 03 YEARS WILL ALSO BE ADMITTED
3. EXTRA LANGUAGES TAUGHT: GERMAN/FRENCH

*PARENTS PLEASE APPLY EARLY TO AVOID DISSAPPOINTMENT*
FIRST PREFERENCE TO TSUNAMI AFFECTED CHILDREN
**Vacancies:** GRADUATES, TRAINED, A/L QUALIFIED TEACHERS AND AMI QUALIFIED (MONTESSORI) AND ADMINISTRATOR
*INITIAL TRAINING FOR THREE (03) MONTHS AT MANIPAY*
Sangarapillai Road, Manipay. T.P. 4591983

## சர்வதேச பாடசாலை - மானிப்பாய் "முன்மாதிரியான பாடசாலை"

வடக்கில் பிரமாண்டமான ஆரம்ப விழா - தை 2006
1. முன்பள்ளியிலிருந்து 7ஆம் வகுப்பு வரையானது 2. ஒரு வயது முதல் மூன்று வயது பிள்ளைகளும் சேர்க்கப்படுவார்கள்
3. ஜெர்மன்/பிரெஞ்சு மொழிகளும் கற்பிக்கப்படும்
வரையறுக்கப்பட்ட அனுமதிகள் மட்டுமே உள்ளதால், பெற்றோர்கள் தாமதிக்காது விண்ணப்பித்து ஏமாற்றத்தைத் தவிர்த்துக் கொள்ளவும்
**சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு முன்னுரிமை**
மாணவர்களுக்கான சிறப்பு வசதிகள் 01. தங்குமிடம் (மாணவர் விடுதி) 02. போக்குவரத்து இலவசம்
01. யாழ்ப்பாணம் - குருநகர்- இராசாவின் தோட்டம் - மானிப்பாய் 2. சுழிபுரம் - சித்தன்கேணி - மானிப்பாய்
03. உரும்பிராய் - கோண்டாவில் - கொக்குவில் - மானிப்பாய்.

(41030)(21.16.24)

சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய். தொ.பே.: 4591983

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நேற்று 07.10.2005 யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற 24 ஆவது பட்டமளிப்பு விழாவில் தொழில் நிர்வாகமாணிப் பட்டம் (B.B.A) பெற்ற எமது உயர்தர கணக்கீட்டு நிறுவன A.A.C. இயக்குநர் செல்வி

*யோகநாதன் யசந்தினி* B.B.A(Hons)

அவர்களை மென்மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்படைய வாழ்த்துகிறோம்.

(41045) அரியாலை உயர்தர கணக்கீட்டு நிறுவன (A.A.C)
(11-33-45) ஆசிரியர்கள், பெற்றோர்சங்கம், மாணவர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*2004 ஆம் ஆண்டில் வடமராட்சி வலயத்தில் சிறந்த ஆசானாக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்ட யா/குடத்தனை அ.மி.த.க. பாடசாலையில் கல்வி கற்பிப்பவருமான*

### திரு.முத்துக்கிருஷ்ணன் கதிர்காமலிங்கம்

*அவர்களைப் பாராட்டி, மேன்மேலும் சிறப்புற்று சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ மனமார வாழ்த்துகிறோம்.*

(41102) வாழ்த்துவோர்:
சி.விஜயசிறி - சறோஜாதேவி,
வி.விஜேந்திரா, வி.சஜேந்திரா (மருமக்கள்).

## மரண அறிவித்தல்கள்

### அப்பாரத்தினம் சண்முகநாதன்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் இல. 75, கொக்குவில், சம்பியன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாரத்தினம் சண்முகநாதன் (ஓய்வுபெற்ற அதிகாரி, தபால் தந்தித் திணைக்களம்) அவர்கள் நேற்று (07.10.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாரத்தினம் - செல்லாச்சி தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்ற தம்பையா - சோதிமதி தம்பதியரின் மருமகனும் பாலசிங்கம் (இளைப்பாறிய முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி) அவர்களின் சகோதரரும் காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும் மீனலோஜினி (ஆசிரியை, யா/வேம்படி மகளிர் கல்லூரி), ரமணி (கொழும்பு), சதானந்தன் (லண்டன்), காண்டீபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் உதயகுமாரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - வேலணை பிரதேச சபை), உதயா (கொழும்பு), லதா (லண்டன்), ரோகிணி (மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கௌதமி, றன்மழி, உத்பலா, கிரிராஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.10.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காகப் பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 75, சம்பியன் வீதி,* தகவல்:
*கொக்குவில்.* (41108) (11-33-45) செ.உதயகுமாரன் (மருமகன்).

### கந்தசாமி செந்தில்குமரன்

*(அகில இலங்கை சமாதான நீதிவான், கணக்காளர், இலந்தைக்குளம் பிள்ளையார், பழனி ஆண்டவர் ஆலய அறங்காவலர்)*



கொழும்புத்துறை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி செந்தில்குமரன் நேற்று (07.10.2005) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் கந்தசாமி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற திருமதி ஞானாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், தெய்வமாலினியின் (உபதபால் அதிபர், கொழும்புத்துறை) அன்புக் கணவரும் ஐங்கரன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), அச்சுதன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் பாசமிகுதந்தையும் காலஞ்சென்றவர்களான இராஜசிங்கம்-யோகாம்பாள் தம்பதியரின் அருமை மருமகனும் தெய்வமனோகரன், தெய்வஜோதி, தெய்வசக்தி, தெய்வரஞ்சினி, தெய்வசெல்வி, தெய்வகுமரன் ஆகியோரின் மைத்துனரும் நவரட்ணம் (கட்டட ஒப்பந்தகாரர், அராலி)- காலஞ்சென்ற பத்மாதேவி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.10.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*02, விதானையார் ஒழுங்கை,* தகவல்:
*கொழும்புத்துறை மேற்கு.* (41104) (11-33-45) திருமதி தெய்வமாலினி (மனைவி).

## மரண அறிவித்தல்கள்

### வைத்தியலிங்கம் கனகம்மா

தலங்காவற் பிள்ளையார் கோயிலடி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியலிங்கம் கனகம்மா ஹொலண்டில் காலமானார்.

அன்னார் வைத்தியலிங்கத்தின் மனைவியும் பராசக்தி, காலஞ்சென்ற சற்குணநாதன், தங்கப்பொன், சோமாவதி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் பரமேஸ்வரன், இந்திராதேவி, குமாரசாமி, காலஞ்சென்ற தளையசிங்கம், உலகநாதன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தலங்காவற் பிள்ளையார் கோயிலடி,* தகவல்:
*திருநெல்வேலி.* (41107) (11-33-45) பெறாமக்கள்.

### திருமதி சின்னத்தம்பி அன்னம்மா

அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி அன்னம்மா அவர்கள் நேற்றுமுன்தினம் (06.10.2005) வியாழக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் தங்கம், நாகலிங்கம், அருணாசலம், பூரணம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் நேசமணி, காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் கந்தசாமி (கனடா), தங்கராசா (சுவிஸ்), தேவராசா (கனடா), அருந்தவமணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் குணசேகரம் (முன்னாள் மின்முகாரி, காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனம்), தேவி (கனடா), ரூபி (கனடா), சாந்தினி (கனடா), பிறேமன் (தபாலதிபர், யாழ்ப்பாணம்), கலா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (08.10.2005) சனிக்கிழமை மதியம் 12 மணிக்கு தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*அளவெட்டி தெற்கு,* தகவல்:
*அளவெட்டி.* (41047) (11-33-45) சி.குணசேகரம் (மருமகன்).


**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சூர்யா, அசின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடித்த

**கஜினி** காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30 6.30, 9.30,

(ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்)

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்

சரத்குமார், வைகைப்புயல் வடிவேலு, நமீதா நடித்த

**சாணக்யா**

காட்சிநேரம்:- பு.நே. 2.30 6.30, 9.30,

**மனோகரா** யாழ்ப்பாணம்

இன்றுமுதல் இளையதளபதி விஜய், ஜோதிகா, விவேக் நடித்த

**திருமலை**

11.10.05 முதல் பார்த்திபன், வடிவேல், லட்சுமிராய் நடித்த
குண்டக்க மண்டக்க...

காட்சிநேரம்:- 10.30, 2.30 6.30, 9.30, (பு.நே.)

(சி-44110)

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
ஜெயம் ரவி, கலாபவன்மணி, வடிவேல் நடித்த

**மழை** (சினிமா)

காட்சிநேரம்:- பு.நே. 11.00, 3.00, 7.00, 9.30,

**மானிப்பாய் றோட்டரக் கழகத்தின்**
**வளர்ச்சி நிதிக்காக நடாத்தப்படும்**
**மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி**

இடம் : கந்த ரோடை சவாரித்திடல்
காலம் : 09.10.2005 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : பி-பகல் 2.00மணி (புதியநேரம்)

அனுசரணை வழங்குவோர்:

**தணிஸ் ரெக்ஸ்**

மூத்தவினாயகர் கோயிலடி, நவாலி வீதி,
ஆனக்கோட்டை T.P.: 222 2955
ஒரே கூரையின் கீழ் பல்வேறு விதமான புடவை வகைகளுக்கும் அத்துடன் மற்றும் ஒரு சேவையான தொலைத்தொடர்பு, போட்டோ பிரதி, பக்ஸ் போன்றவற்றிற்கு தனித்துவம் வாய்ந்த ஸ்தாபனம்.


## மரண அறிவித்தல்

### திருமதி நல்லம்மா இராசையா (சின்னத்தங்கச்சி)



தாவடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டவரும் கனடாவில் வசித்தவருமாகிய நல்லம்மா இராசையா அவர்கள் கனடா ரொறொன்ரோவில் நேற்று (07.10.2005) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் சுப்பிரமணியம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் பாக்கியலட்சுமி (கந்தர்மடம்), பரமேஸ்வரன் (கனடா), மகேஸ்வரன் (பபா-கட்டப்பிராய்), ராஜேஸ்வரன் (ராசு - ஈச்சமோட்டை), விக்னேஸ்வரன் (கனடா), கமலேஸ்வரன் (கனடா), ஞானேஸ்வரன் (கனடா), இந்திரேஸ்வரன் (தாவடி), ஈஸ்வரன் (கனடா), பாலேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நடராஜா (கந்தர்மடம்), ஜெயந்தி (கனடா), மங்கையர்க்கரசி, கோமதிதேவி, லீலாவதி (கனடா), ஜெயந்தி (கனடா), தயா (கனடா), றஞ்சினி, சுகந்தி (கனடா), ஆனந்தசேகரம் (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் பூரணலட்சுமி, மனோன்மணி (கனடா), காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, சின்னத்துரை, பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இதுபற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மகேஸ்வரன், ராஜேஸ்வரன் (கருடா கூல்பார், நவீனசந்தை உட்புறம், யாழ்.)
இந்திரேஸ்வரன் (லக்ஷிகா ரெக்ஸ், 51, நவீனசந்தை உட்புறம், யாழ்.)

கனடா. ஈசன்.
T.P: 001-9055025171 (41111)(33-11-45)


Jayoda **ஜயோதா** ජයෝදා

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

டிக்கட் தொடர் இல. 7242164 முதல் 7254148 வரை சீட்டிழுப்பு இல. 174 திகதி 06-10-2005

வெற்றி எண்கள் **1 4 7 3 2 4** சுப்பர் எண் **17**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,00,00,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,00,00,000/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 50,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 104 | 5,000/- | 5,20,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,031 | 500/- | 5,15,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,294 | 50/- | 5,14,700/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,02,021 | 10/- | 10,20,210/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 5,000/- | 60,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 104 | 1,000/- | 1,04,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,028 | 100/- | 1,02,800/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,199 | 20/- | 2,03,980/- |
| | | மொத்தம் | 45,91,190/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 51,93,790/- |

இந்த திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. **10,286,250/-**

தொடர் இல. 6316834 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 ஒக்டோபர் 10 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| திருகோணமலை | 7242651-8-70 |
| அம்பாறை | 7243379-0-49 |
| இரத்தினபுரி | 7248037-6-21 |
| அனுராதபுரம் | 7250885-3-71 |
| மட்டக்களப்பு | 7248048-6-56 |
| காலி | 7244828-8-55 |
| கண்டி | 7248652-2-35 |
| நுவரெலியா | 7243071-5-42 |

## இயன்மாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு புறுவ் ஹெறாவ்டேயை நோர்வே அரசு நியமித்துள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பு வரும் இவர், அரச மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடல்களை நடத்திய பின்னர் எதிர்வரும் 13ஆம் திகதி கிளிநொச்சி வந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுகளை நடத்துவார்.

அவருடன் கிளிநொச்சி வரும் இயன் மார்டின் மனித உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாகத் தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடல் நடத்துவார். (3)

## ஸ்ரீ காயத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீசாலையிலுள்ள காயத்திரி பீட ஆச்சிரமத்தில் நேற்றிரவு உணவருந்திக்கொண்டிருந்த சமயமே முகமூடி அணிந்து வான் ஒன்றில் வந்த சுமார் பத்துப் பேர் ராஜ்குமார் சுவாமிகளைக் கடத்திச் சென்றனர் என்று முதலில் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

ஆயுதமுனையில் கடத்திச் செல்லப்பட்ட சுவாமி ராஜ்குமார் மிகமோசமாகத் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் இணுவில் பகுதியிலுள்ள ஒழுங்கை ஒன்றில் போடப்பட்டார்.

தற்போது யாழ்.ஆஸ்பத்திரியில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.(ஐ-9-ரி)

## ரணில் ,மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், அவர்களில் முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கட்டுப்பணம் செலுத்தியிருந்த ஜெயினுலாப்தீன் ஹாபிஸ் நஸீர் அகமட் தேர்தல் செயலகத்திற்கு நேற்று வந்திருந்தபோதும் அவர் வேட்பு மனுவைத் தாக்கல் செய்யாமல் தேர்தலில் இருந்து ஒதுங்கிக் கொண்டார்.

இராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல்கள் தலைமைச் செயலகத்தில் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க இந்த வேட்பு மனுக்களை ஏற்றுக்கொண்டார். அவருக்கு உதவியாக பிரதித் தேர்தல் ஆணையாளர்களான பி.எம். சிறிவர்தன, டபிள்யூ.பி.சுமனசிறி ஆகியோர் கடமையாற்றினர்.

நேற்றுக்காலை எட்டு மணி முதல் 11 மணி வரை வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. 11 மணி முதல் 11.30 மணிவரையிலான அரை மணிநேரம் ஆட்சேபனைகள் தெரிவிப்பதற்கென ஒதுக்கப்பட்டபோதும் எந்த ஓர் ஆட்சேபனை மனுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. இதனால் தாக்கல் செய்யப்பட்ட 13 வேட்பு மனுக்களையும் தாம் ஏற்றுக்கொண்டார் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

வேட்பாளர்களுக்கான இலக்கங்கள், சின்னங்கள் மற்றும் நிறங்கள் இன்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டார்.

தேர்தல் செயலகத்திற்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 8.30 மணியளவில் அமைச்சர்கள், ஆதரவாளர்கள் சகிதம் வருகை தந்தார்.

எனினும், தேர்தல் அலுவலகத்திற்குள் அவருடன் அவரது கட்சியின் செயலாளரான சுசில் பிரேம ஜயந்த மற்றும் பிரதமரின் சட்டத்தரணியான எச்.எல்.டி.சில்வா ஆகிய மூவர் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர்.

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க 9.30 மணிக்கு ஆதரவாளர்களுடன் வந்துசேர்ந்தார்.

அவரை ஐ.தே.க. பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தேர்தல் செயலக வளவில் வரவேற்றார்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் முன்னாள் அமைச்சரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.என்.சொக்ஸி, அவர்களது கட்சிச் செயலாளரான கே.வேரகொட ஆகியோர் செயலகத்திற்குள் சென்றனர்.

இதேபோன்று ஏனைய வேட்பாளர்களும் தத்தமது சட்டத்தரணியுடனும், கட்சிச் செயலாளருடனும் சமுகமளித்து வேட்பு மனுக்களைத் தாக்கல்செய்தனர்.

வேட்பு மனுத் தாக்கலை ஒட்டி பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் தேர்தல் அலுவலகத்திற்குள் நேற்றுக் கூடியிருந்தபோது பல்வேறு சுவாரஸ்யமான காட்சிகளையும் காண முடிந்தது.

கட்சிக் கூட்டங்களிலும் பிரசார மேடைகளிலும் ஆளையாள் திட்டித் தீர்த்து சேற்றை வாரிப் பூசிக்கொண்டிருக்கும் அரசியல்வாதிகள் அங்கு மிகவும் அந்நியோன்னியமாக, ஆளுக்காள் குசலம் விசாரித்து, தட்டிக்கொடுத்து, நட்புறவோடு உரையாடிக்கொண்டிருந்தமை பலரையும் கவனிக்கவைத்தது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அலுவலகத்திற்குள் பிரவேசித்ததும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எழுந்து கைலாகு கொடுத்து வரவேற்றார். அதேபோன்று ரணில் விக்கிரமசிங்கவும் பிரதமருக்குக் கைகொடுத்து அவரின் தோளில் கைபோட்டுமிகவும்நெருக்கமாகத் தனது அன்பை வெளிப்படுத்தினார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது ஆசனத்தில் இருந்து எழுந்து சென்று எல்லா வேட்பாளர்களுடனும் கைலாகு கொடுத்து சிரித்த முகத்துடன் மிகவும் இயல்பாக குசலம் விசாரித்ததுடன் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டார். அதே வேளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 'டென்ஷனாக' காணப்பட்டமையையும் அவதானிக்கமுடிந்தது. (ஐ-க)

## யாழ்.நகரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரத்த வெள்ளம் தோய்ந்த நிலையில் அவரது சடலம் வீதியில் கிடந்தது.

யாழ்.பிரதான வீதிக்குச் செல்வதற்காக யாழ்.கோவில் வீதி அருள் ஆச்சிரமம் மடம் பகுதியால் சென்று பிரதான வீதிக்கு ஏறிய போது அவரைப் பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த துப்பாக்கிதாரிகள் இவரை நடுவீதியில் வைத்து வழிமறித்தனர் என்றும்-

பின்னர் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தனர் என்றும் - தெரிவிக்கப்படுகிறது.

சடலத்தின் கை, முதுகு, தலை, முகம் ஆகிய பகுதிகளில் ஆறுக்கும் மேற்பட்ட துபபாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

இச் சம்பவத்தையடுத்து படையினரும் பொலீஸாரும் அங்கு குவிக்கப்பட்டிருந்தனர்.

யாழ்.பொலீஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொலீஸ் பொறுப்பதிகாரி தலைமையில் வந்த பொலீஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

முற்பகல் 11.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்த யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் சடலத்தைப் பார்வையிட்டதுடன் விசாரணைகளை நடத்தினார்.

மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்கும்படி அவர் உத்தரவிட்டார்.

நண்பகல் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்டது.

சூட்டுச் சம்பவத்தையடுத்து யாழ்.பிரதான வீதியின் போக்குவரத்து காலை 9.30 மணி தொடக்கம் 12மணிவரை பொலீஸாரால் தடைசெய்யப்பட்டிருந்தது.(7-86-190)

## அமைதிக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோபல் பரிசு பரிந்துரைப்புக் குழு தெரிவித்துள்ளது.

உலகிற்கு இருக்கக்கூடிய மிகப்பெரிய அச்சுறுத்தல் எது என்பதற்கு அங்கீகாரம் கிடைத்திருப்பதன் அடையாளமாக இப்பரிசு அமைந்துள்ளது என்று எல்.பரடே கூறினார். (ஐ-ரி)

## விஞ்ஞாபனத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காக ஜனாதிபதியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியுமான சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நியமிக்கப்பட்ட கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனக் குழு நேற்றுமுன்தினம் மாலை கூடியது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கூடிய இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலின்போது முன்வைக்கப்படவுள்ள கொள்கைகள் மற்றும் அது தொடர்பில் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இதர கட்சிகளின் நிலைப்பாடுகள் என்பன பற்றியும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இதனையடுத்து இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை அதில் உள்ளடக்குவது குறித்து பேசப்பட்டபோதும் அது குறித்தான இறுதி முடிவை எடுக்க முடியாமற்போனதாகத் தெரியவருகிறது.

எவ்வாறாயினும் நாளை ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடு திரும்பிய பின்னர் அவருடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானத்திற்கு வருவதென நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாம்.

பெரும்பாலும் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணத்துக்கான பொதுக் கட்டமைப்பு மற்றும் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கொண்டிருக்கும் கொள்கை பிரதமர் மஹிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்படமாட்டாது எனத் தெரிய வருகிறது. (ஐ-க)

பொருளியற் கல்லூரி யாழ்ப்பாணம்
(40936) புவியியல்
P.S.குமரன்
A/L DAY
வாரத்தில் 14 மணித்தியால வகுப்பு நடைபெறுகின்றன.
பிரிவு II
ஆரம்பம்: 10.10.2005 திங்கள்
A/L 2007
சனி, ஞாயிறு
ஏறியங்கள்
இன்று ஆரம்பம் 8.10.2005
நேரம் 10 - 11

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகேஸ்வரி தென்னக்கோன்



கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற S.B. தென்னக்கோன் (ஓய்வுபெற்ற சிறாப்பர் -யாழ். கச்சேரி) அவர்களின் அன்பு மனைவி திருமதி நாகேஸ்வரி அவர்கள் 04.10.2005 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு கனகரத்தினம் - சின்னம்மா தம்பதியரின் ஏக புத்திரியும் பிரியந்த (வவா-நோர்வே), சமன்(சுது-கனடா), நிஷாந்த (லக்கி- நீதிமன்றம் - யாழ்ப்பாணம்), அனுரா (பழையமாணவன் -நவீல்ட் பாடசாலை கைதடி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பிரியதர்ஷினி (நோர்வே), சாமினி (எழுதுவினைஞர்-யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், கெவின், அர்வின் ஆகியோரின் அப்பம்மாவும் நடராஜா (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், தொலைத்தொடர்பு), செல்லத்துரை (லண்டன்), ராஜேந்திரா (இலங்கை வங்கி) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கீழ்க் குறிப்பிடும் முகவரியில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நாளை (09.10.2005) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*89/1, கண்டி வீதி,*
*கச்சேரியடி, யாழ்ப்பாணம்.* (சி/45512) (11-45-33) **தகவல்: T. நிஷாந்த (லக்கி - மகன்).**

### நாகராசா யோகம்மா



நல்லூரடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா யோகம்மா நேற்று (07.10.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2005) சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(41116) (11-33-45)
*169, (ரவி வீடியோ சென்ரர்),*
*கச்சேரி -நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.* **தகவல்: குடும்பத்தினர்.**

### பொன்னுத்துரை கனகம்மா (சின்னராசு)

காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை கனகம்மா நேற்று (07.10.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் விஜயகுமாரி, வசந்தகுமாரி, வசந்தகுமார் ஆகியோரின் அருமைத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2005) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளி கோயிலடி,*
*திருநெல்வேலி மேற்கு,*
*யாழ்ப்பாணம்.* (41113) (11-33-45) **தகவல்: பொ.வசந்தகுமார்.**

## மரண அறிவித்தல்கள்

### தனுஷா மாதவராஜா

***(2ஆம் வருட கலைப்பீடம் - யாழ். பல்கலைக்கழகம்)***

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தனுஷா மாதவராஜா நேற்று (07.10.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் மாதவராஜா - அனுசியா தம்பதியரின் அன்பு மகளும் துவாரகனின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*அண்ணாவியார் வளவு,*
*கே.கே.எஸ்.வீதி,*
*சுன்னாகம்.* (41115) (11-33-45) **தகவல்: மாதவராஜா (தந்தை).**

### திருமதி செல்லையா இலட்சுமிபிள்ளை

புற்றளை, புலோலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி செல்லையா இலட்சுமிபிள்ளை அவர்கள் நேற்று (07.10.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் வீரகத்தி-செல்லம்மா (Rtd. TUG Master) அவர்களின் அன்பு மனைவியும் சிவகுமார், விக்னேஸ்வரன், இராதாகிருஷ்ணன், திருமதி பரமேஸ்வரி, திருமதி மங்கையர்க்கரசி, திருமதி யோகேஸ்வரி, திருமதி கமலேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.10.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி பூதவுடல் 8 மணியளவில் ஆனைவிழுந்தால் மயானத்தில் தகனஞ்செய்வதற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

*புற்றளை,*
*புலோலி தெற்கு, புலோலி.* (சி/45511) (11-33-45) **குடும்பத்தினர்.**

### தம்பு மாணிக்கம்

வளர்மதி வீதி, மட்டுவில் தெற்கைச் சேர்ந்த தம்பு மாணிக்கம் 4.10.2005 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.10.2005) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, மட்டுவில் சின்னத்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி/45513) (11-33-45) **தகவல்: த.கந்தசாமி. (மகன் - கந்தோ).**

Softview Computer College
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170, 0777846811
புதிய பிரிவுகள் ஆரம்பம் :- 09.10.2005
Dip. in Microsoft Office
Dip. in Desktop Publishing
Dip. in Computer Programming
Dip. in Hardware Engineering
Dip. in Network Engineering
Dip. in Visual Basic
Dip. in Computer Science
Dip. in AutoCAD
Dip. in C++
Dip. in Internet E-Mail
உங்கள் பதிவுகளை இன்றே முன்பதிவு செய்து கொள்ளுங்கள்
இப்பிரிவிற்கு மட்டும் பதிவுக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.